பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று

**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1—12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ. |
|---|---|
| கலம் ... வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப்படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-வரு ஐப்பசி-மீ நடு-உ (15—11—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் உஅ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## செய்தித்திரட்டு.

மகாத்மா காந்தி கச்சுபிரதேசத்திலிருந்து ஆமதபாத்திற்குத் திரும்பி விட்டார். கச்சு சமஸ்தானத்தில் செய்த சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு மிகவும் இளைத்துப் போயிருக்கிறாராம். அவர் தனது ஆச்ரமத்தில் ஒரு மாதம் தங்குவாரென்று தெரிகிறது.

* * *

சென்ற வாரம் சுவாமி சிரத்தானந்தர் சென்னைக்கு விஜயம் செய்து தீண்டாமையைப் பற்றிப் பல பிரசங்கங்கள் புரிந்துவிட்டு பாலக்காட்டுக்குச் சென்றிருக்கிறார்.

* * *

இம்மாதம் 6-ந்தேதி சென்னை சட்டசபையில் ஆந்திர சர்வகலாசாலை மசோதா மூன்றாந்தரமாக வாசிக்கப்பட்டு சட்டமாகச் செய்யப்பட்டது.

* * *

வங்காளத்திலுள்ள சிட்டகாங் முனிசிபல் எல்லைக்குள் கட்டாய ஆரம்பக்கல்வி ஆரம்பிப்பதென சிட்டகாங் முனிசிபாலிட்டியார் தீர்மானித்தார்கள். இதை கவர்ன்மெண்டாரும் அங்கீகரித்து விட்டார்கள். ஆகையால் டிசம்பர் மாதத்திலிருந்து இத்திட்டம் அமுலுக்குவரும்.

* * *

பம்பாய் சட்டசபையில் ஆலைத்தொழிலாளர்களின் கஷ்ட நிவர்த்திக்காக கவர்ன்மெண்டார் உடனே தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்ரீமான். போலே கொண்டு வந்த தீர்மானம் தோற்றுப் போயிற்று.

* * *

காலஞ்சென்ற ஸர் சுரேந்திரநாத்பானர்ஜி ஓர் உயில் எழுதிவைத்திருப்பதாகவும் அவருடைய சொத்தின் மூலமாக மாதம் 5000 ரூபாய் வருவாய் வருமென எதிர்பார்க்கப்படுகின்றதென்றும் அதில் ரூபாய் 500 அவருடைய குமாரருக்குச் சேரவேண்டுமென்றும், மீதத்தை மாகாணத்தின் சுகாதர விருத்திக்கு செலவிடவேண்டுமென்றும், உயிலில் எழுதியிருப்பதாகவும், அத்தொகையை வங்காள பொது சுகாதார இலாகாவினிடம் கொடுத்து விடவேண்டுமென்றும் எழுதியிருப்பதாகவும் ஓர் செய்தி கூறுகிறது.

*

இந்தியாவின் புதிய இராஜப்பிரதிநிதியின் நியமனத்தைப்பற்றி லாலாலஜபதிராய் தம்முடைய 'பீபிள்' என்னும் பத்திரிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:— இரும்புத் தூண்களினால் இந்தியாவின் நிர்வாகம் நடந்து வரும் வரையில் இத்தேசத்திற்கு யார் இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டாலும் அது ஒரு பொருட்டாகாது. இத்தேசத்திற்குப் பயன் படக்கூடியவனை ஏற்பட வேண்டுமென்று இந்தியர் விரும்பும் பட்சத்தில் அவர்கள் அதிகார வர்க்கத்தினரை பிரீதி செய்விக்கவேண்டும். இல்லாவிடில் அவர்களை அலட்சியம் செய்ய வேண்டும். அவர்களை அலட்சியம் செய்வதென்பது இதுவரையில் நமக்கே நஷ்டமாக ஏற்படுகிறது. ஏனென்றால் இவ்விஷயமாக நம் நாட்டார் ஒரு மனதுடன் ஒத்து வருவதில்லை. ஆகையினால் புதிய நியமனத்தைப் பற்றி வீணைப் பத்திரிகைகளில் எழுதுவதில் யாதொரு பிரயோஜனமும் வாய்க்காது.

* * *

மகாத்மாவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அவருடைய சிஷ்யையாக இருக்க விரும்பிய மிஸ். மாடலின் ஸ்லேடென்ற ஐரோப்பிய ஸ்திரீ சென்ற வாரம் ஆமதபாத்துக்கு வந்து காந்தியடிகள் ஆச்ரமத்தில் தங்கியிருக்கிறார்.

* *

பூஜ்யர் ஆண்ட்ரூஸ் இம்மாதம் 9-ந் தேதியன்று ஜெம்ஷட்பூரில் பத்திரிக்கைப் பிரதிநிதியிடம் கூறியதாவது:— பூரி ஜில்லாவில் எங்கு சென்றாலும் என்னுடன் இரகசியப் போலீஸ் உத்தியோகஸ்தரை அனுப்புவதென அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தது வருந்தத்தக்கது. உத்தியோகப் பற்றற்றவர்கள் செய்யும் உதவியைப் பெருமனதுடன் கவர்ன்மெண்டார் வரவேற்பார்களென்று அரசாங்க அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. கஷ்ட நிவர்த்தி வேலை செய்ய முன்வருபவர்களுடன் ரகசியப் போலீசாரை அனுப்புவதெனக் கவர்ன்மெண்டார் தீர்மானித்தால் உத்தியோகப் பற்றற்றவர்கள் கஷ்ட நிவர்த்தி வேலையில் அதிகாரிகளுடன் இனி எவ்விதம் சேருவார்கள்? அப்படி அவர்கள் சேராவிட்டால் அதில் ஆச்சரியப் படுவதற்கொன்றும் இடமில்லை. கவர்ன்மெண்டார் மரியாதை கட்டினால் தான் ஜனங்களும் மரியாதை காட்டுவார்கள்.

* *

நவம்பர் மாதம் 15, 16-தேதிகளில் மாயவரம் கூரை நாடு கீழ் வீதியில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் தஞ்சை ஜில்லா இசை வேளாளர் 2-வது மகா நாடு நடைபெறும். அவ்வமயம் தமிழ் நாட்டுத்தலைவர்களாகிய ஸ்ரீமான்கள். ஈ. வெ. இராமசாமி நாயக்கர், திரு. வி. கலியாண சுந்திர முதலியார், டாக்டர். வரதராஜலு நாயுடு முதலியோர் விஜயம் செய்வார்களென காரியதரிசி எழுதுகிறார்.

* *

ஸ்ரீமான்களான கேல்கரும், ஜெயகரும் அகில இந்திய சுயராஜ்யக்கக்ஷியின் நிர்வாக சபையங்கத்தினர் பதவிகளை ராஜிநாமாச் செய்து விட்டனர்.

* *

அகில இந்திய தேசபந்து ஞாபகச்சின்ன நிதிக்கு இது வரையிலும் 61 ஆயிரத்து 443 ரூபாய் 6 அணா 6 பை சேர்ந்திருக்கிறது.

* *

இங்கிலாந்தில் தொழில் செய்து பிழைக்கும் ஜனங்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் பருத்தி வியாபாரத்தை நம்பியே பிழைக்கிறார்கள். நமது நாட்டுப் பருத்தியைச்சீமைக்கு ஏற்றுமதி செய்யாமல் நிறுத்தி விட்டால் அவர்கள் பாடு திண்டாட்டமாகும்.

* * *

பிள்ளைகளுக்கு இருபத்திநாலு வயதுக்கு முன்னும், பெண்களுக்குப் பதினாறு வயதுக்கு முன்னும் கலியாணஞ்செய்யலாகாதென்று சுவாமி சிரத்தாநந்தர் கூறுகிறார்.

* * *

வைகையிலும், தாம்பிரவர்ணியிலும், பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. திருநெல்வேலிக்கருகேயும், அதற்குத் தெற்கிலும் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது.

* *

இலங்கையில் குருவித்தை யென்னும் கிராமத்தில் ஒரு தகப்பன் அபின்தின்றுவிட்டு மிச்சத்தைத் தலையணையின் கீழே வைத்துவிட்டுத் தூங்கினான். அவனுடைய நாலு வயது குழந்தை அந்த அபினை எடுத்துத் தின்று மாண்டு போய்விட்டது.

* * *

மலாய் நாட்டுக்கு நாகபட்டணம் வழியாக ஆயிரக் கணக்கான ஜனங்கள் போகின்றனர். பிழைப்பை நாடி, சென்ற வாரத்திலே தக்ஷிணர் என்ற கப்பலில் 2200 பேரும், அடுத்தாற்போல், மால்டா என்ற கப்பலில் 1500 பேரும், தலம்வா என்ற இன்னொரு கப்பலில் 1700 பேரும் சென்றிருக்கின்றனர்.

* * *

இம்மாதம் 28, 29-ந்தேதிகளில் சேலத்தில், ஸ்ரீமான். டி. எஸ். கணபதியாபிள்ளையால் ஸ்தாபிக்கப் பெற்றுள்ள ஸ்ரீதியாகராய நிலயம் பாடசாலையை, ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், கதர்சாலையை ஸ்ரீமான். எ. இராமசாமி முதலியாரும் முறையே திறந்து வைப்பார்கள். ஸ்ரீமான்கள் திரு. வி. கலியாண சுந்திர முதலியார், ம. ரா. குமாரசாமி பிள்ளை, எக்ஸிகியூடிவ் எஞ்சினியர், மாணிக்கநாயக்கர் முதலிய பலர் விஜயம் செய்வார்கள்.

* *

(3-வது பக்கம் தொடர்ச்சி.)

ஸ்ரீனிவாச முதலியார், டேவிட், பிரவ் துரை, பார்க்கர், மைமைதீன் சாய்பு, காதர் சாய்பு இவர்களில், முதல் நால் வரும் உள்ளூர் வாசிகளல்ல. அதற்கடுத்தவர் சேர்மன் தயவால் நியமனம் பெற்றவர். கடைசியாகக் குறிப்பிட்ட ஸ்ரீமான். காதர் சாயபு உள்ளூர் வாசியும், பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவருமாவார். உயர்ந்தவரென்றும் மக்களுக்கு மோக்ஷத்துக்கு வழி காட்டுபவரென்றும், யேசுநாதரின் உண்மைக் கொள்கைகளைப் பரப்புபவரென்றும், ஐரோப்பிய மேன்மகனென்றும் சொல்லிக் கொள்ளும், ரெவரெண்ட். பிரவ் துரையவர்கள் இவ்வக்கிரமங்களில் எப்படிக் கலந்திருக்கிறாரென்பதைப் பொது ஜனங்கள் யோசிக்க வேண்டுமாய்க் கோருகிறோம். மற்றவை பின்னால்."

# ஈரோடு சேர்மனின் அடாத செய்கை.

ஈரோடு முனிசிபாலிட்டியின் பொது ஜனங்களின் வரிப்பணம் தாறுமாருகச் செலவழிக்கப்பட்டு வருவதைப் பற்றி இதற்கு முன் பல தடவைகளில் குறிப்பிட்டிருக்கிரேும். போதுமான அளவு ஜலதாரை கட்டாததனுலும் ஓடையில் விழுந்து தேங்கும் கசுமாலத்தண்ணீரை ஒழுங்காய் வெளிப்படுத்தாத காரணத்தாலும், அதிலிருந்து கொசுக்களும்,விஷக்காற்றுகளும் உண்டாகி, ஊரெங்கும் பாவி, வீடுகள் தோறும் மலேக்காய்ச்சலாலும், குளிர் காய்ச்சலாலும் ஜனங்கள் அவஸ்தைப் படுவதைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல், நமது முனிசிபல் சேர்மன் அவர்கள் சிங்கார வனத்தின் பெயரால் வரிப்பணத்தைக் கண்டபடி வாரி இறைப்பதைப் பற்றியும், துர்விநியோகப் படுத்திக் கொள்வதைப்பற்றியும், இதற்கு முன் குறிப்பிட்டிருக்கிரேும். சென்ற 10-ந் தேதி ஈரோடு முனிசிபாலிட்டியில் சிங்கார வனத்திற்காக இது வரையில் கவுன்சிலர்களுடைய அநுமதி பெற்றும், அநுமதி பெருமலும் செலவு செய்திருக்கும் பணத்தைப் பரிசிலனை செய்வதற்காகவும், சேர்மன் கேட்கிறபடி யெல்லாம் மேற்கொண்டு பணம் கொடுக்கலாமா வென்பதைப் பற்றியும் யோசிக்கவும், 10—11—25-ல் சேர்மனல் ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டிருந்தது. அந்த மீட்டிங்குக்கு அதிகப்படியான கவுன்சிலர்கள் வந்து சேர்மனுக்கு விரோதமாய்த் தீர்மானங்கள் செய்து விடுவார்களோ வென சேர்மன் பயந்து குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே தனக்கு வேண்டிய கவுன்சிலர்களை அழைத்துக்கொண்டு வந்து தன் இஷ்டம்போலெல்லாம் காரியங்களை முடித்துக்கொள்ள, என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமோ அவற்றை இரகசியமாய் எழுதிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மற்ற கவுன்சிலர்களும் வந்து விட்டார்கள். இதற்கு மேல் நடந்த விஷயத்தைப்பற்றி கவுன்சிலர்களான ஸ்ரீமான்கள். கே. ஏ. ஷேக்தாவுத் சாகிப், ஏ. பழனியப்ப செட்டியார், ஈ. ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆகிய மூன்று கனவான்களும் சேர்மன் மீது ஈரோடு முன்சீப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து தீர்மானங்களை நிறைவேற்றவொட்டாதபடி இஞ்சங்ஷன் பெற்று விட்டார்கள். அந்த பிராதின் சாராம்சத்தைக் கீழே குறிப்பிடுகிரேும்:—

1. வருஷாந்தர உத்தேச வரவு-செலவு திட்டமாகிய பட்ஜற்றில், சிங்கார வனத்திற்காக 3000 ரூபாயும், குழந்தைகள் விளையாடும் ஸ்தலத்திற்காக 2000 ரூபாயும் ஒதுக்கிவைக்கப்பட்டது.

2. இப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலும் இதை நிறைவேற்றும் போது சேர்மன் ஒவ்வொரு அயிட்டங்களைப்பற்றியும் கவுன்சிலர்களுடைய சம்மதம் பெற்றுத்தான் செலவு செய்யவேண்டும்.

3. இப்படியிருக்க, சேர்மனல் இதற்கென்று இதுவரை 7000 ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்டது. இவற்றுள் 633 ரூபாய் தவிர பாக்கியெல்லாம் கவுன்சில் சம்மதமில்லாமலே சேர்மென் தன் இஷ்டம் போல் செலவழித்திருக்கிருர்.

இப்படியிருக்க இதுவரை சேர்மனல் செலவு செய்யப்பட்டிருக்கும் தொகைக்கு அநுமதி கொடுக்கவும், மேற்கொண்டு 5000 ரூபாய் அநுமதிக்கவும், கவுன்சிலர்களுடைய சம்மதத்தைப்பெற 26-10-25-ல் சேர்மென் ஓர் மீட்டிங்கு போட்டிருந்தார். அந்த மீட்டிங்கை 2-11-25 க்கு தள்ளிவைத்து அதற்குள்ளாக, சேர்மன் செலவு செய்திருக்கும் தொகைகளைப்பரிசிலனை செய்ய ஓர் சப்கமிட்டி நியமிக்கப்பட்டது.

4. சப்கமிட்டி தன்னுடைய ரிப்போர்ட்டை அநுப்பிவிட்டது.

5. 10-11-25-ந் தேதி மீட்டிங்குக்காக குறிப்பிட்ட நேரத்துக்கு வாதிகளான கவுன்சிலர்களும் மற்ற சில கவுன்சிலர்களும் மீட்டிங்கு நடக்கும் ஸ்தலத்துக்கு வந்து பார்த்தபோது, சேர்மன் மினிட் புஸ்தகத்தில் என்னமோ எழுதிக்கொண்டேயிருந்தார். அந்த சமயம் சேர்மனைப்பார்த்து, நாங்கள் வந்திருக்கிரேும், நீங்கள் மினிட் புஸ்தகத்தில் என்னமோ எழுதிக்கொண்டிருக்கிறீர்களேயென்று கேட்டார்கள். இதை சேர்மன் கொஞ்சமும் கவனிக்காமல் எழுதிக்கொண்டேயிருந்தார். மறுபடியும் கவுன்சிலர்கள் கண்டித்து, அதென்னவென்று கேட்க பின்னல் தெரியும் என்று சொல்லிவிட்டுத் தனக்கு வேண்டியதை எழுதிக்கொண்டார். கவுன்சிலர் ஸ்ரீமான். ஷேக்தாவுத் சாயபு சப்கமிட்டியினுடைய ரிப்போர்ட் என்னவென்பதைப் படிக்கும்படி கேட்டார். அதையும் படிக்கமுடியாதென்று சேர்மன் சொல்லிவிட்டார்.

6. பிறகு சேர்மன் அங்கிருந்த ரெவரெண்ட் ஏ. டப்ளியூ பிரவ் என்னும் ஐரோப்பிய கவுன்சிலரை, மேல்கொண்டு வேலை செய்வதற்காக பல அயிட்டங்களுக்கு 2700 ரூபாய் அநுமதிப்பதாக ஓர் தீர்மானத்தை பிரேரேபிக்கும்படி அழைத்தார். அவர் அது போலவே பிரேரேபித்தார். மற்ெருரு கவுன்சிலரான ஸ்ரீமான். வி. ஐ. டேவிட் அதை ஆமோதித்தார்.

**7. ஸ்ரீமான். ஷேக்தாவூத் சாய்பு அவர்கள், பச்சைக் கொடி பந்தல் போடுவதற்கு 1000 ரூபாய் நீக்கி பாக்கித் தொகையை மாத்திரம் அநுமதிக்கலாமென்று ஒரு திருத்தப் பிரேரேபனை கொண்டு வந்தார். இதை ஸ்ரீமான் பழனியப்ப செட்டியார் ஆமோதித்தார். இதை சேர்மன் வோட்டுக்கு விட்டார். இத்திருத்தப் பிரேரேபனைக்கு 7 கவுன்சிலர்கள் அனுகூலமாக வோட் கொடுத்ததினுல், திருத்தப் பிரேரேபனை நிறைவேறிற்று.**

8. ஸ்ரீமான். வி. ஐ. டேவிட் என்பவர், சேர்மன் தூண்டுகோலின்பேரில் எழுந்து இத்திருத்தப் பிரேரேபனை ஒழுங்கானதல்லவென்றும் அசல் தீர்மானம் முன்னமே நிறைவேறிவிட்டதால், திருத்தப் பிரேரேபனையைப் பற்றிக் கவனிக்கவேண்டியதில்லையென்றும் சொல்லிவிட்டார். ஸ்ரீமான் ஷேக்தாவூத் சாய்பு, உடனே எழுந்து ஸ்ரீமான். பிரவ் துரையின் அசல் தீர்மானம் வோட்டுக்கு விடப்படவில்லையென்றும், நிறைவேறவில்லையென்றும் ஆக்ஷேபித்தார். அசல் தீர்மானத்தைப் பிரேரேபித்த ஸ்ரீமான். பிரவ் துரை தம்முடைய தீர்மானம் வோட்டுக்கு விடப்படவில்லையென்றும், அது நிறைவேறவில்லையென்றும் சொல்லியும், சேர்மன் கேட்காமல் ஒழுங்குக்கு விரோதமாய், ஸ்ரீமான். பிரவ் துரையின் தீர்மானம் நிறைவேறிவிட்டதாகவும், திருத்தப் பிரேரேபனை ஒழுங்குத் தவறென்றும் தீர்மானித்துவிட்டார்.

9. சேர்மன் ஸ்ரீமான். பிரவ் துரையின் தீர்மானத்தை வோட்டுக்கு விடாமல் நிறைவேறி விட்டதாகச் சொல்வது சுத்தப் பொய்யும், ஒழுங்கீனமானதுமாகும். ஆதலால் ஷை தீர்மானம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. சேர்மனுனவர் திருத்தப் பிரேரேபனையை வோட்டுக்கு விட்டதையும், மெஜாரிட்டி கவுன்சிலர்களால் தீர்மானிக்கப்பட்டதையும் பதிவு செய்துகொண்டு அதை அமுலில் கொண்டுவரக்கடமைப் பட்டவர்.

10. இந்தக் காரணங்களால் சேர்மன் ஸ்ரீமான். ஸ்ரீனிவாச முதலியாரவர்களுடைய காரியம், கெட்ட எண்ணமுள்ளதும், அயோக்கியத் தனமுள்ளதும், அதிகாரத்திற்கு மேற்பட்டதும், அக்கிரமமானதும், தனது யோக்கிதைக்குப் பொருந்தாததுமாகும்.

11. ஆகையால் வரி கொடுக்கும் பொது ஜனங்களின் நன்மையைக் கோரி ஸ்ரீமான். பிரவ் துரையின் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வாமலிருக்கவும், வரிப்பணத்தை எடுத்து இதற்காக ஒரு பைசாவேனும் செலவு செய்யாமலிருக்கவும் ஸ்ரீமான். ஷேக்தாவூத் சாய்பின் தீர்மானத்தை ஒழுங்குப்படி நிறைவேறினதாகக் குறிப்புப் புஸ்தகத்தில் எழுதித் தீர்மானித்து, அதை அமுலுக்குக் கொண்டுவரவும், வேண்டியது மிகவும் அவசியமானதாயிருக்கிறது.

12. அல்லாமலும், நீதியையும் கிரமத்தையும் அநுசரித்து, பச்சைக்கொடிப் பந்தலுக்கென்று சேர்மன் வரிகொடுப்போர் பணத்தை எடுத்துச் செலவு செய்யாமலிருக்கும்படி சேர்மன்மீது ஓர் இஞ்சங்ஷன் கட்டளையும் பிறப்பிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

என்று இம்மாதிரி ஓர் பிராது கொடுத்ததின்பேரில் கோர்ட்டாரவர்கள் இதை ஏற்றுக் கொண்டு தற்கால சாந்தியாய் ஓர் இஞ்சங்ஷன் கட்டளையும் பிறப்பித்திருக்கிருர். இதைப்பற்றி வரிகொடுப்போருக்கு அதிகம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லையென்றே நினைக்கிரேும். பொது ஜனங்களுடைய பணத்தை இம்மாதிரி தப்பான வழியில் செலவழிக்கக் கூடாது என்கிற கக்ஷிக்கு அம்மீட்டிங்கில் அநுகூலமாயிருந்தவர்கள், ஸ்ரீமான்கள். கே. ஏ. ஷேக்தாவூத் சாய்பு, மு. ச. முத்துக்கருப்பன் செட்டியார், மு. ச. பழனியப்பன் செட்டியார், ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், ஈ. ஜி. சுப்பிரமணிய ஐயர், ஈர்ஜி. காளிதாஸ் சேட், ஆர். சதாசிவம் செட்டியார், முதலியவர்கள். சேர்மனுக்கு அநுகூலமாயிருந்து சேர்மனுக்கு அநுகூலமாய் வோட் கொடுத்தவர்கள், ஸ்ரீமான்கள்.

(தொடர்ச்சி 2-வது பக்கம் பார்க்க.)

# திமிஷ்கு கோர சம்பவம் கண்டிக்கப்பட்டது.

சென்னை முத்தியால்பேட்டை அங்கப்பநாயக்கன்தெரு மஸ்ஜிது மஃமூர் என்ற ஜும்ஆ மஸ்ஜிதில் 6-11-25 வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குப்பின் திமிஷ்கு நகரில் பிரஞ்சுக்காரர்கள் செய்த அநீத அட்டூழியங்களைக் கண்டிக்கவும், அதனால் ஷஹீதான முஸ்லிம்களுக்கு துஆச்செய்யவும் "ஸைபுல் இஸ்லாம்" பத்திராதிபர் மௌலானா மௌல்வி அஹ்மது ஸையீது சாகிப் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் முஸ்லிம்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. சபையில் ஏராளமான முஸ்லிம்கள் குழுமியிருந்தனர். அக்கிராசனர் சிரியாவிலும் முக்கியமாக திமிஷ்கு நகரிலும் பிரஞ்சுக்காரர்கள் செய்த இரக்கமற்ற குரூரச் செயல்களையும் திமிஷ்கு நகரின் பூர்வாங்கத்தையும் முஸ்லிம்களுக்கு அப்பட்டணம் முக்கியமானதென்பதைப்பற்றியும் விபரமாக எடுத்துக்கூறிக் கீழ்காணும் தீர்மானத்தைப் பிரரேபனை செய்தார். அது சபையோர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறிற்று. இத்தீர்மானத்தைப் பத்திரிகைகளுக்குத் தந்திமூலம் அறிவிக்கும்படியாக அக்கிராசனருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. பின்பு திமிஷ்கில் படுகொலை செய்யப்பட்ட ஷுஹதாக்களின் மஃபிரத்திற்காகவும் மீதியுள்ளவர்களைக் காப்பாற்றும்பொருட்டும், ஐரோப்பியர்கள் மேலதிகாரம் புரிந்துவரும் இதர முஸ்லிம் தேசங்களில் இவ்விதக்கோர சம்பவம் நடவாமல் காப்பாற்றும்படியும் ஆண்டவனிடம் கெஞ்சி அரப் மௌலானா ஹம்ஸா மக்கீ அவர்களால் துஆக் கேட்கப்பட்டது. தீர்மானம் கீழ்வருமாறு:—

"சிரியாவில் பொதுவாகவும், முக்கியமாக திமிஷ்கு நகரிலும் பிரஞ்சுக்காரர்களால் செய்யப்பட்ட இரக்கமற்ற அநீத அட்டூழியங்களைக் கேள்விப்பட்டு, இம்மதராஸ் முஸ்லிம்களுக்கு மிகுந்த கோபமும், வருத்தமும், துக்கமும் ஏற்பட்டன. அட்டூழியமாகவும், ஜீவகாருண்யமற்றும் குற்றமற்ற முஸ்லிம் குடி ஜனங்களைப் பிரஞ்சுக்காரர்கள் செய்த மிருகத்தனமான செய்கையை மதராஸில் கூடிய முஸ்லிம்களின் இப்பொது சபை அழுத்தமாகக் கண்டிக்கின்றது. இப்போது, சிரியாவில் ஆட்சிபுரிய அதிகாரம் பெற்றுப் பிரஞ்சுக்காரர் நடத்திவரும் பயங்கரமான ஆட்சியை உடனே நீக்கவேண்டுமென்று சர்வதேச சங்கத்தாரை இச்சபை வேண்டிக்கொள்ளுகிறது."

மேல்கண்ட தீர்மானம் பம்பாய் கிலாபத், டெயிலி, கிரானிக்கிள், ஹம்தர்த் டில்லி, தன்ஸீம் அமிர்தசரஸ், ஜமீந்தார் லாஹூர், முஸ்லிம் அவுட்லுக் லாஹூர் ஆகிய பத்திரிகைகளுக்குத் தந்திமூலம் அறிவிக்கப்பட்டது.

---

# சுதேசமித்திரனின் சின்ன புத்தி.

நாளது 1925-ஸு அக்டோபர் மீ 30-உ சுதேசமித்திரன் 4-வது பக்கம் 3 வது பத்தியில் ("தர்ம சொத்திலிருந்து கக்ஷிப் பிரசாரமா") "நாம் எதிர் பார்த்தபடி ஜரூராக காரியங்கள் நடக்கின்றன," என்ற வாசகத்தின் தொடர்ச்சியாக "இந்து மத தர்ம சொத்து பரிபாலன சட்டம் ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரி பிடிவாதமாக இயற்றியது" 'பரிசுத்தமான நோக்கமுடன் செய்யப்பட்டதாக சொல்லப் படுவதானது எலக்ஷனுக்கு ஓர் முக்கிய கருவியாக செய்யப்பட்டிருக்கிற'தென்று 'நிரம்பிய அனுபோகம்' பெற்ற நிருபர் சொல்லுகின்றார். அதன் உண்மை யாதெனில், ஷை சட்டப்படி நியமிக்கப்பட்ட கமிஷனர்களில் ஒருவராகிய ஸ்ரீமான். பி. வி. நடராஜ முதலியார் அவர்கள் சில தினங்களுக்குமுன் கோயமுத்தூர் டவுன் ஹாலில் ஸ்ரீமான். M. சம்பந்த முதலியார் B.A. B.L. அவர்கள் தலைமையின் கீழ் சில பொது ஸ்தாபனங்களிலிருந்து கமிஷனர் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கும் காலத்தில் கமிஷனர் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமவன:— "இந்துமத தர்ம பரிபாலன சபைகளிலும், ஆலயங்களிலும் மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் நடந்து வந்த அக்கிரமங்களையும், நடக்கின்ற அக்கிரமங்களையும் எடுத்துரைத்து இப்பேர்க் கொத்த தீய செயல்கள் இனி நடவாதிருக்கும் பொருட்டும் நடை பெற வேண்டியவைகள் கிரமப்படி நடத்தி வைக்கும் பொருட்டும் இச்சட்டம் ஆக்கப்பட்டதேயன்றி இதன் சொத்திலிருந்து சர்க்கார் கொள்ளையடித்துக் கொண்டு போகவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தினால் செய்யப் பட்டதல்ல வென்றும், இதற்காக ஜனங்களும் கூடியவரை ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு தன் சொற்பொழிவை நிறுத்திக் கொண்டார்.

ஆனால் 30—10—1925-ல் சுதேசமித்திரனில் வெளி வந்த வியாசத்தை கவனிக்குமிடத்து, ஆதிகாலம் தொட்டு ஏகபோகமாக கேள்வி கேட்பாரின்றி அனுபவித்து வந்தது மல்லாமல் தெலுங்கு பாஷையில் செப்பும் பழமொழிக்கிணங்க "மீக்குச்சூப்பு நாக்கு மேப்பு" என்று சொல்லுகிறபடியாக நிவேதனத்தை சில ஆலயங்களில் சுவாமிக்குக் காண்பித்தும், காண்பியாமலும் கூட கொள்ளை யடித்துத் தின்ற கோவில் பெருச்சாளிகளுக்கும், அவர்களுக்கு ஏவல்காரர்களாக அவர்களின் கீழ் வயிறு வளர்த்து வந்த பணியாளர்களுக்கும், இவர்களுக்கெல்லாம் மேல்பட்ட அந்தஸ்தில் இருந்து கொண்டு அவர்கள் இஷ்டம் போலும், தங்கள் இஷ்டம் போலும் காரியாதிகளை நடத்திக் கொண்டும், திருடிக்கொண்டும் இருந்த சிற்சில பொது ஸ்தாபனங்களின் உத்தியோகஸ்தர்களுக்கும், ஷை சட்டமானது அருவருப்பைக் கொடுக்ககூடியதே யாகும். இவ்வருத்தம் காரணமாக கக்ஷிகளை ஒன்றோடொன்று இணைத்து ஒருவருக்கொருவர் மனத்தாங்கலை யுண்டுபண்ணி பின்னால் மாச்ரியத்தையும் உண்டுபண்ணி வைத்து அவைகளுக்கிடையில் தங்களுடைய சாண் வயிறு வளர்க்க சலாம் போடும் குலாம்கள் நேரில் பார்த்தவற்றை எழுதாது ஏதேதோ தாறுமாறாக எழுதத்தலைப்படுகின்றார்கள். இவர்களையும் பத்திரிகை நிருபர்களாக கொண்ட பத்திரிகைகளுக்கு எந்தக் காலத்தில், எந்த நேரத்தில், எந்த வியாசத்தைக்கொண்டேனும் பத்திரிகைக்கு இடையூறு விளைத்து கெடுத்து விடுவார்களோ வென்கிற சந்தேகம் எம்போன்ற பத்திரிகை வாசிக்கும் மித்திரன் நேயர்களுக்கு உண்டாவது சகஜமே.

அல்லாமலும் நமது விரோதிகள் என்னென்னவோ சூழ்ச்சி செய்வதாகவும் அதையும் எதிர்த்துப் போராட எல்லோருடைய ஒத்துழைப்பையும் வேண்டுவதாகவும், மற்றும் பலவாராகவும் ஸ்ரீமான். நடராஜ முதலியார் அவர்கள் பேசியதாகத் தெரிகிறது என்கிறார். மேல் கண்ட வாசகத்தின்படி பார்க்குமளவில், ஷை வியாசத்தை எழுதிய நிருபர் தான் நேரில் அப்பிரசங்கத்தைக் கேட்காமலும்; ஆனால் யாரோ ஒருவர் சொல்லக் கேட்டும் அதைக்கொண்டு தன்னுடைய நீண்ட கால அனுவபந்திலிருந்து தெரிந்து கொண்ட விஷயங்களில் கொஞ்சம் கலந்தும் வியாசம் வரைய ஆரம்பித்து விட்டார் போலும். அதாவது "புலியைக் கண்டவரைக் கண்டு கலங்கிய கல் நெஞ்சர்" போலும் எனச் செப்பும் பழமொழிக் கொப்பாகத் தோன்றி விட்டார்.

நிற்க, தேவஸ்தான பணத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாய் பிரசாரம் செய்வதும் தேவஸ்தான சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றுவெனத் தெரியவேண்டுமென்றும் ஓர் அதிகாரி தோரணையில் எழுதியுள்ளவர் ஷை தர்மசொத்துக்களை "உத்தியோக" "வேட்டைக்காரர்களைக்கொண்ட ஒரு கக்ஷியார் துஷ்பிரயோகம் செய்வதை நாட்டார் அழுத்தமாக கண்டிக்க கடமைபட்டிருக்கிறார்கள் என்றும் இன்னும் என்னென்ன விபரீதங்கள் நடக்கப் போகின்றனவோ அறியோம் என்றும், மனமானது நைந்து நைந்து துரும்புபோல் இருந்த திரேகம் தூண்போல் ஆக வீங்கவும் கதறுகின்றார்!

உத்தியோக வேட்டைக்காரர்களை கொண்ட கக்ஷியார் என்பதாக அவர் சொல்லும் விஷயத்திலிருந்து கவனித்தால் அவருக்கே ஓர் சாதாரண உத்தியோகம் கிடைக்கப் பெறாதிருந்த நிலைமையினாலோ அல்லது அவருடைய உறவினர்கள், நண்பர்கள் எவர்களுக்கேனும் உத்தியோகங்கள் கிடைக்காதிருந்த வருத்தத்தினாலோ தான் சித்த சுவாதீன மிழந்த நிலைமையில் மனதினுதித்த நிலைமையில், மனதில் உதித்தவற்றை யெல்லாம் கொட்டிக் குறை கூற ஆரம்பித்து விட்டார். இவ்விதம் அசம்பாவிதமாகவும், அநாகரீகமாகவும் நிருபத் தொழிலை நடத்திக்கொண்டு வரும் நபர்களை

# பண்டை இந்தியாவில் போக்கு வரவு சாதனங்கள்.

ஒரு 'சரித்திரக்காரன்' எழுதியது.

பிரிட்டிஷாருடைய ஆட்சி தலை காட்டுவதற்கு முன்னர் இந்தியா ஒரு பெரிய வனமாயிருந்ததென்றும், ஜனங்கள் அநாகரிகர்களாகவே இருந்தார்களென்றும் போக்குவரவு சாதனங்கள் சரியானபடி அமைந்திருக்கவில்லையென்றும், சரித்திர ஆராய்ச்சி ஒருவாறு முற்பட்டிருக்கும் இந்தக் காலத்திலும் சிலர் நினைப்பது ஆச்சரியமென்றே கூறவேண்டும். முகம்மதியர் ஆட்சியிலும், ஹிந்துக்களின் ஆட்சியிலும் பிரஜைகள் ஏறக்குறைய சுகமாக வாழ்ந்து வருவதற்குரிய எல்லா வசதிகளும் இருந்தன என்றும் கூறலாம். சாணக்கியருடைய அர்த்த சாஸ்திரத்தில் இது சம்பந்தமான விவரங்கள் காணப்படுகின்றன. சாக்கியரும், சந்திர குப்தனும் சமகாலத்தவராதலால், சந்திரகுப்தனுடைய காலத்தில், அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவும் இருந்தன என்று அறிஞர் கருதுகின்றனர். இதற்கு மாறுபட்ட கருத்துடையாரும் சிலர் இருக்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சந்திரகுப்தனுடைய ராஜ்யம் இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் இந்தியாவைக் காட்டிலும் விசாலமானதாயிருந்தது என்று கூறலாம். சிதறுண்டு கிடந்த சில்லரை இராஜ்யங்களை யெல்லாம் ஒன்று படுத்தி அதற்குத் தானே தலைமைபூண்டு அறமுறை தவறாது நிருவாகம் நடத்தி வந்த சந்திரகுப்தனுடைய திறமை புகழத்தரமன்று. ஓர் அரசாங்கமானது செம்மையாக நடை பெறுவதற்கு முக்கியமான சாதனங்களாகக் கருதப்படும் திறமையுள்ள இராணுவம், ஒழுங்குபட்ட ஆட்சி முறை, இராஜ்யத்தின் முக்கியமான பாகங்களைச் சம்பந்தப்படுத்தும் போக்கு வரவு சாதனம் முதலிய யாவும் சந்திரகுப்தனுடைய ஆட்சியில் இருந்தன என்று திண்ணமாகக் கூறலாம். அவன் காலத்தில் நிலமூலமாகவும், நீர் மூலமாகவும் செல்ல என்னென்ன சாதனங்கள் இருந்தன என்பதைப் பற்றி இங்கு சுருக்கமாகக் கூறுவோம்.

சந்திரகுப்தனுடைய இராஜ்யத்திற்கு பாடலிபுத்திரம் தலைநகராகயிருந்ததென்பது அனைவரும் அறிந்த விஷயம். அங்கிருந்து, இராஜ்யத்தின் நான்கு திக்குகளுக்கும், வியாபார நிமித்தம் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. எந்தத் திசையிலிருந்து வியாபாரம் அதிகமாக நடைபெற்றதோ அந்தத் திக்கில் பாதைகள் அதிகமாக இருந்தன. மற்றும் எந்தப் பக்கத்திலிருந்து விலையுயர்ந்த பொருள்களும் அதிகமாக உபயோகப்படக் கூடிய பொருள்களும் வந்தனவோ அந்தப் பக்கத்துப் பாதைகள் முக்கியமாகக் கருதப்பட்டன. உதாரணமாக வடக்கே ஹிமாசலத்தை நோக்கிச் செல்லும் பாதைகளை விட, தட்சணத்தை நோக்கிச் செல்லும் பாதைகள் முக்கியமானவையென்று கௌடில்யர் கருதுகிறார். ஏனெனில் வடக்கேயிருந்து கம்பளம், தோல், குதிரை முதலிய சாமான்கள் வந்துகொண்டிருந்தன. ஆனால் தெற்கேயிருந்து நவரத்தினங்கள், பொன், சரக்குகள் முதலியன வந்துகொண்டிருந்தன. பொன், இரத்தினம் முதலியவைகளை உடைய சுரங்கங்கள் தெற்கேயிருந்தன. இவைகளின் வழியாகவே பாதைகள் சென்றன. இதனால் தெற்குப் பாதைகளில் வியாபாரப்போக்கு வரவும் மனிதர் போக்கு வரவும் அதிகமாக நடை பெற்றன. மற்றும் சந்திரகுப்தன் அரசியல் காரணத்திற்காகவும் பாதைகளை அதிகமாக ஏற்படுத்தியிருந்தான். சத்துருக்களை அடக்குவதற்காக அனுப்பப்படும் இராணுவம் முதலியன இந்தப்பாதைகள் வழியாகவே சென்றன.

பாதைகளும் வியாபார வழிகளும் அவைகளின் உபயோகத்திற்குத் தக்கவாறு வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருந்தன. மற்றும் அவைகள் எந்த இடத்தை முடிவாக அடைகின்றனவோ அதற்குத் தகுந்தாற் பேலவும் பெயர்கள் அமைக்கப்பட்டிருந்தன. அரசனால் உபயோகப்படுத்தப்பட்ட பாதை "இராஜமார்க்கம்" என்று அழைக்கப்பட்டது. இது முப்பத்திரண்டு அடி அகலங்கொண்டதாயிருந்தது. இராஜ்பாதிபதி என்ற முறையில் முக்கியமான சில காலங்களிலேயே அரசன் இப்பாதை வழியாகச் செல்வான். அரசன் செல்லும்போது இராணுவ வீரர்கள் வாளேந்திய கையர்களாய்ப் பாதையின் இருமருங்கும் காவல் புரிந்து நிற்பார்கள். ஜனங்கள், இப்பாதை வழியாய்ச் செல்லாதபடி அந்தக் காலங்களில் விலக்கப்படுவார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இத்தகைய ஆறு பாதைகள் இருந்தன என்று சொல்லப்படுகிறது. வடக்கு தெற்காக மூன்றும் கிழக்கு மேற்காக மூன்றும் சென்றன. இரதங்கள் செல்வதற்கென்று முப்பத்திரண்டு அடி அகலமுடைய பாதைகள் இருந்தன. சாதாரணமான கால் நடைகள் செல்வதற்கென்று எட்டு அடி அகலங்கொண்ட (பசுவதம்) பாதைகளும் பெரிய மிருகங்கள் செல்வதற்கென்று (மஹாமசுபதம்) பெரிய பாதைகளும் சிறிய மிருகங்கள் செல்வதற்கென்று நான்கு அடி அகலமுடைய (க்ஷுத்ர பசுபதம்) பாதைகளும் இருந்தன. கழுதைகளும் ஒட்டகங்களும் செல்தற்கென்று தனியான பாதைகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பாதைகள் எந்தக்காலத்திலும் தேசத்தின் எந்தப் பாகத்தின் வழியாகச் சென்றாலும் ஒரே விதமாக இருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தன. வியாபார நிமித்தம் வண்டிகள் செல்வதற்காகப் பாதைகளும் சில்லரை வியாபாரிகள் !செல்வதற்கென்று குறுகிய பாதைகளும் இருந்தன:

பாதைகள் எந்த இடத்திற்குச் சென்று முடிகின்றனவோ அதற்குத் தகுந்தாற் போலவும் பெயரிடப்பட்டிருந்தன. தலைநகரத்திலிருந்து வெளி ஜில்லாக்களுக்குச் செல்லும் பாதைகளுக்கு 'ராஷ்டிரபதம்' என்று பெயர். இவை முப்பத்திரண்டு அடி அகலங்கொண்டவனவாயிருந்தன. மேய்ச்சல் தரைகளை முடிவாகக்கொண்ட (விவீதபதம்) முப்பத்திரண்டு அடி பாதைகளும், பயிர் நிலங்களுக்குச் செல்லும் பாதைகளும், இராணுவஸ்தலங்களுக்குச் செல்லும் (வியூஹபதம்) பாதைகளும், சுடுகாட்டுக்குச் செல்வதற்கென்று (ஸ்மஸான பதம்) தனிப்பாதைகளும் இருந்தன. கிராமங்களுக்கும் கிராமங்கள் வழியாகவும் சென்ற பாதைகள் 'கிராமபதம்' என்றழைக்கப்பட்டன. மேற் கூறப்பட்ட பாதைகளில் பெரும்பாலன அறுபத்து நான்கு அடி அகலமுடையனவாயிருந்தன. முப்பத்திரண்டு அடி அகலமுடைய வனங்களுக்குச் செல்லும் (வனபதம்) பாதைகளும், யானைகள் வசிக்கும் காடுகளுக்குச் செல்லும் பதினாறு அடி அகலமுடைய (ஹஸ்திக்ஷேத்திரபதம்) பாதைகளு மிருந்தன. மேற் கூறப்பட்டவை தவிர, கோட்டைகளுக்குள் செல்வதற்கென்று சில தனியான பாதைகளும் இருந்தன. கருங்கற்களைப் பூமியில் பரப்பிச் சமமாக்கப்பட்ட பாதைகள் இரதங்கள் செல்வதற்கென்று உபயோகப்பட்டன. இரண்டு கோபுரங்களுக்கு நடுவே செல்லும் பாதைகளும், கோயிலுக்குச் செல்லும் (தேவபதம்) பாதைகளும் இருந்தன. ஒரே ஆள் செல்லக்கூடிய ஒற்றையடிப் பாதைகளையும் வயல்களுக்கு இடையே செல்லும் பாதைகளையும் அந்த சாஸ்திர ஆசிரியர் கூறியிருக்கிறார்.

(தொடர்ச்சி 9-வது பக்கம் பார்க்க.)

---

நிருப நேயர்களாக வைத்துக் கொண்டிருப்பதானது சுதேசமித்திரனுக்கு ஓர் பெருங் குறையேயாம்.

ஆதலால், இனி வருங்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடை பெறாதிருக்குமென்று என்னுகிறேன், என ஸ்ரீமான். வ. சன்முக சுந்திரம் பிள்ளை எழுதுகிறார்.

குறிப்பு:— மேற்கண்ட வியாசம் கோயமுத்தூர் ஸ்ரீமான். வ. சண்முகசுந்தரம் பிள்ளையவர்களால், சுதேசமித்திரனுக்கு அனுப்பப்பட அப்பத்திரிகை இதைப்பிரசுரியாது திரும்ப அநுப்பிவிட்டதாம். பத்திரிக்கை யொன்றில் தாறுமாறான விஷயம் ஏதேனும் வருமாயின், அதை மறுத்துக் கூறி எழுதப்படும் நிருபங்களைப் பிரசுரியாது திருப்பிவிடுவது பத்திரிகை நடத்தும் கொள்கைக்கே விரோதமாகும். நிற்க, நமது நேயர் குறிப்பிடும் சுதேசமித்திரன் நிருபரைப் போன்ற பலர் அப்பத்திரிகைக்கு நிருபர்களாயிருக்கின்றனர். இவர்கள் அயோக்கியத்தனமாகவும், சின்னபுத்தி கொண்டும் உண்மையைத் திரித்து மரிப்போர்ட் செய்வதை நாம் பலதடவைகளில் கண்டித்திருக்கிறோம். இங்ஙனம் கண்டிப்பதில் கடினபதங் கொண்டிருக்கின்றதென சிலர் கூறுகின்றனர். இத்தகைய நிருபர்களுக்கு நாம் உபயோகிக்கும் வார்த்தைகள் தகுதிதானு அல்லது இன்னும் அதிகக்கடின பதம் வேண்டுமாவென்னும் விஷயத்தைப் பொதுஜனங்களை நிர்ணயம் செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ள பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-ஸு ஐப்பசி-மீ ௩௰-௨

# சுயராஜ்யம்.

சுயராஜ்யமென்னும் பதம் நமது நாட்டில் பெரும்பான்மையாய் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் சுயநலத்துக்கே பயன்படுத்தப்பட்டு வருவதோடு, பாமர ஜனங்கள் அதை அறியாதபடி சுயகாரியப்புலிகளால் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. சுயராஜ்யமென்பதைப் பலர் பலவாறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருடர்கள் தாங்கள் திருடுவதைப் பிறர் கவனியாமல் விட்டுவிடுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். சிறையிலிருக்கும் கைதிகள் தங்களை வெளியில் விட்டுவிடுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். குடிகாரர்கள் தாங்கள் தாராளமாகவும், விலை நயமாகவும், வேண்டிய அளவு குடிக்க வசமுள்ளதாய் கலால்வரி எடுபட்டுப் போவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். பாமர ஜனங்கள் பலர் இந்தியாவைவிட்டு வெள்ளைக்காரரை விரட்டிவிடுவது தான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். ஏழைகள் ரூபாய் 1-க்கு 8படி அரிசி விற்பதுதான் சுயராச்யமென்று நினைக்கிறார்கள். தரித்திரர்கள் பணக்காரர் சொத்துக்களையெல்லாம் பிடுங்கி தங்களுக்குச் சரிசமானமாய்ப் பங்கிட்டுக் கொடுப்பது தான் சுயராச்யமென்று நினைக்கிறார்கள். இவையெல்லாம் அறியாமையால் நினைப்பதாக வைத்துக்கொண்டாலும், அறிந்தவர்கள், படித்தவர்களென்போரோ, வெள்ளைக்காரர் உத்தியோகங்களையெல்லாம் தாங்களே அநுபவித்துக்கொண்டு 500, 1000, 5000, 10,000 ரூபாய் சம்பளம் பெறுவது தான் சுயராச்யமென்று நினைக்கிறார்கள். உயர்ந்தோர்களென்கிற பிராமணர்களோ பாமர ஜனங்களைக் கொண்டு கிளர்ச்சி செய்வித்து ஷை சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகங்களையும், பதவிகளையும் தாங்களே பெறுவதும், தாங்கள் பிறவியில் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்பதை நிலை நிறுத்தி, ஆதிக்கம் பெறுவது தான் சுயராச்யமென்று நினைக்கிறார்கள். ராஜதந்திரிகளென்போரும், ராஜீயவாதிகளென்போரும், சீமையிலிருந்து பார்லிமெண்டார் மூலம் நமக்கு வழங்கப்படும் சில அதிகாரங்களையும், பதவிகளையுந்தான் சுயராச்யமென்று நினைக்கிறார்கள். காங்கிரசில் தற்காலம் பிரதானஸ்தானம் வகிப்பதாய்ச் சொல்லப்படும் சுயராச்யக் கக்ஷியாரென்போரும், அரசாங்கத்தாரிடமிருந்து எதையாவது பெறுவதைத்தான் சுயராச்யமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (இவற்றையெல்லாமறிந்து தான் இங்கிலாந்தில் ஸ்ரீமான். சத்திய மூர்த்தியின் பிரசங்கம் கேட்ட கர்னல் வெட்ஜ்வுட் துரை இந்தியர்கள் இன்னமும் தங்களுக்கு வேண்டியது என்ன (சுயராச்யம்) வென்பதையே தெரிந்து கொள்ளவில்லையென்று சொன்னார் போலும்!)

## மகாத்மா காந்தி.

மகாத்மா காந்தியடிகள் இவற்றையொன்றையுமே சுயராச்யமென்று கருதவேயில்லை. இவ்வித சுயராச்யங்களிலெதுவரினும், நமது நாட்டில் இப்போதுள்ள கஷ்டங்கள் எதுவும் மாறவே மாறாதென்பது அவருடைய அபிப்பிராயம். இப்போது சுயராச்சியமில்லையென்று சொல்வதற்கறிகுறியாக இருப்பது:—

(1) மக்கள் சுயமரியாதையில்லாமலும், சமத்வமில்லாமலும் ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவனெனச் சொல்லிக்கொண்டு, பெரும்பான்மையான மனிதர்களை தீண்டாதார்களென்று ஒதுக்கி, இழிவான மிருகங்களிலும் கேடாய் மதித்து, மனித சுதந்தரமில்லாமல் கொடுமைப்படுத்தி வைத்திருப்பது.

(2) தினம் ஒரு வேளைக்கஞ்சிக்கும் வழியில்லாமலும், தங்கள் மானத்தைக் காக்க ஆடையில்லாமலும் கோடிக்கணக்கான ஜனங்கள் பட்டினியாலும், மானபிமானத்தாலும் சாவது.

(3) தேசத்தில் பெரும்பான்மையோரான தொழிலாளிகள் தங்களுக்குத் தொழிலில்லாமல் தங்கள் ஜீவனத்திற்காக எதுவும் செய்ய ஒருப்பட்டு, ஜீவனத்திற்காக அந்நியநாட்டுக்குச்சென்று இழிவாய் வாழ்ந்து மாய்வது.

(4) நமது தேவைக்கு வேண்டிய சகல வஸ்துக்களும், அந்நிய நாட்டிலிருந்து வருவதாய் ஏற்பட்டு அதன் பொருட்டு நமது செல்வங்கள் வெளிநாடுகளுக்குப்போய், நமது நாடு தரித்திரத்தில் மூழ்கிக்கொண்டு போவது.

இத்யாதி கெடுதிகள் நம் நாட்டைவிட்டு என்று அகலுமோ அன்றுதான் நமது நாடு சுயராச்சியம் பெற்றநாடு ஆகுமேயல்லாமல், அந்நியர்கள் அரசாக்ஷிசெய்யுங்காரணத்தினாலேயே சுயராச்சியமில்லையென்று சொல்லிவிட முடியாதென்றும், மகாத்மாகாந்தி அடிக்கடி கதறி வருவதோடு, இவ்வித சுயராச்யத்தை அடையவே ஒத்துழையாமையையும், கதர், தீண்டாமை, மது விலக்கு முதலிய நிர்மாண திட்டத்தையும் உபதேசித்தார்.

## படித்தவர்கள்.

இதனைமேல் ஜாதியாரென்போரும், படித்தவர்களென்போரும் இவ்விரண்டும் சேர்ந்த சுயராச்யக் கக்ஷியாரென்போரும் ஆதியிலிருந்தே ஒப்புக்கொள்ளவில்லை. இவை ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலுக்கு வந்து பலன் தருவதானால் மேல் ஜாதியாரென்போருக்கும், படித்தவர்களென்போருக்கும் பெரிய ஆபத்தாய்த்தான் முடியும். ஏனெனில், தீண்டாமையொழிந்தால், மேல் ஜாதியென்பது போய் விடும். கதர், மது விலக்கு வெற்றிபெற்றால், ஏழ்மை நிலையும், தரித்திரமும் மறைந்து விடும். இவ்விரண்டும் மறைந்தால் படித்தவர்களுக்குப் பிழைப்பிருக்காது.

## கூட இருந்தே குடியைக் கெடுத்தது.

இந்த இரகசியத்தை அறிந்தேதான், உயர்ந்த ஜாதியார்களென்போரும், படித்தவர்களென்போரும், கூட இருந்தே குடியைக் கெடுத்தது போல் மகாத்மாவின் திட்டத்தை, அவருடன் இருந்தே ஒழித்துவிட்டார்கள். அது மாத்திரமல்லாமல், ராஜீய சுதந்தரமென்ற பொய்ப் பெயர் வைத்து, உத்தியோகம் சம்பாதிப்பதையே பிரதான தத்துவமாய்க்கொண்ட சுயராச்யக்கக்ஷியென்று, ஒரு கட்சியையும் சிருஷ்டித்துக் கொண்டு, காங்கிரஸிலிருந்து மகாத்மாவையும் விரட்டிவிட்டு, உத்தியோக வேட்டையாட காங்கிரஸை ஓர் ஆயுதமாயும் ஏற்படுத்திக்கொண்டார்கள். சுயராஜ்யக்கக்ஷியாரின் கொள்கையான ராஜீய சுதந்தரமென்னும் பொய் அதிகாரமும், பதவியும் நமக்கு கிடைக்கக்கிடைக்க நாடு இன்னும் சீர்கேடடையவும், ஒற்றுமைக்குலையவும், தரித்திரம் பெருகவும், அடிமைத் தன்மை பலப்படவும் தான் ஆகுமேயல்லாமல் தேசம் ஒருக்காலும் முன்னுக்குவர முடியவே முடியாது.

## சீர்திருத்தம்.

உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்னிட்ட காங்கிரஸ்களின் முயற்சியால், நமது அரசாங்கத்தார் இதுவரை இரண்டு தடவைகளில் ராஜீய சுதந்தரமென்னும் இரண்டு சீர்திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, ஒன்று மின்டோ— மார்லி சீர்திருத்தம், மற்றொன்று, மாண்டேகு— செம்ஸ்போர்ட் சீர்திருத்தம். இவைகளின் பலனாய் தேசம் என்னவாயிற்று? இவற்றால் ஏற்பட்ட பதவியையும், உத்தியோகத்தையும் ஆயிரம் பதினாயிரக்கணக்கான சம்பளங்களையும் நம்மில் யார் அடைவது என்கிற சண்டைகளும், பொறாமைகளும், வலுத்து வந்ததும், ஒருவரை ஏமாற்றி ஒருவர் அடையபெற்று ஜனங்களை உபயோகித்துக் கொண்டதுமல்லாமல் வேறென்ன கண்டோம்? 5500 ரூபாய் சம்பளமுள்ள நிர்வாக சபை மெம்பர் பதவிகளும், மந்திரி பதவிகளும் இந்தியருக்குக் கொடுப்பதென்கிற சீர்திருத்தம் பெறாமலிருந்திருப்போமேயானால், இந்து-முஸ்லீம் சண்டைகளும் பிராமணர்— பிராமணரல்லாதார் கக்ஷிகளும் உட்பிரிவு துவேஷங்களும், ஏற்பட்டிருக்குமா? சுயராச்யக்கக்ஷியென்று ஓர் கக்ஷி ஏற்பட்டு தெய்வீக இயக்கமாகிய மகாத்மாவின் இயக்கத்தைக் குலைத்து, உத்தியோக வேட்டையாட முன் வந்திருக்குமா? ஷை சீர்திருத்தங்களென்

## காஞ்சீபுரம் தமிழர் மகாநாடுகள்.

காஞ்சீபுரத்தில் 31-வது ராஜீய மகாநாடு நாளது நவம்பர் மாதம் 21, 22-ந்தேதிகளான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்ராசனத்தின் கீழ் கூடும்.

அது சமயம் சர்வகக்ஷியார்களுமடங்கிய பிராமணரல்லாதார் மகாநாடொன்றும் கூடும்.

பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் கரிசனமுள்ள தமிழ் நாட்டுப் பிராமணரல்லாதார் அனைவரும் வந்திருந்து, தங்களது முன்னேற்றத்திற்கான ஒரு திட்டத்தைக் காணவும், அதை சரிவர அமுலுக்குக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது விஷயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் ராஜீய அபிப்பிராய பேதங்காரணமாகவாவது, சொந்த அசவுகரியங்காரணமாகவாவது அலக்ஷியமாய் இருந்துவிடாமல் கண்டிப்பாய் வரவேண்டுமாய் மறுபடியும் வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீண்டாமையை ஒழிக்கவேண்டியது பிராமணரல்லாதாருக்கு மிகவும் முக்கியமானதொரு கடனாகும். ஏனெனில், தீண்டாதார்களின் முன்னேற்றந்தான் பிராமணரல்லாதார்களின் முன்னேற்றமாகும். தீண்டாதார்களின் துன்பந்தான் பிராமணரல்லாதாரின் துன்பமாகும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் பிராமணரல்லாதார் கடைத்தேறமுடியும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் நாடு சுயராஜ்யமடையும். ஆதலால், தீண்டாமை விலக்கில் கவலையுள்ளவர்களும், தீண்டாதாரென்று சொல்லப்படுபவரும் அவசியம் காஞ்சீபுரத்திற்கு வந்து அதற்கென்று ஓர் மகாநாடு கூட்டி காரியத்தில் பலன் தரத்தக்க திட்டங்களைக் காணவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஈரோடு
15—11—25

ஈ. வெ. ராமசாமி.

னும் ராஜீய சுதந்தரங்கள் கொடுக்குமுன் 70 கோடி ரூபாயாக இருந்தவரி, இப்போது 150 கோடி ரூபாயாக மாறியிருக்குமா? 24 கோடியாக விருந்த இராணுவச் செலவு, இன்று 60, 70 கோடியாக மாறியிருக்குமா? அரசாங்கத்தாரிடமிருந்து பெற்ற சீர்திருத்தம் என்னும் சுயராஜ்யத்தாலல்லவா இவ்வித கஷ்டங்கள் விளைந்தன. மகாத்மாவின் சீர்திருத்தமாகிய நிர்மாணத்திட்டமென்னும் சுயராச்சியத்தைப் பெற்றிருப்போமேயானால், இக்கெடுதிகள் நமக்கு வந்திருக்குமா? சுயராச்சியக் கட்சியார் கோருகிறபடி இன்னுமொரு சீர்திருத்தமென்னும் சுயராச்சியம் சர்க்காரால் கொடுக்கப்பட்டால், நமது கதி என்னவாகும்? இன்னும் எவ்வளவு கோடி ரூபாய் வரி அதிகமாகும்? எவ்வளவு ஜாதிச் சண்டைகளும், வகுப்புத் துவேஷங்களும் வளரும்.

### நாக்கில் ஊறும் தண்ணீர்.

இந்த சீர்திருத்தங்களின் பலனால் ஏற்பட்ட உத்தியோகங்கள் தானே, இன்றையத்தினம் ஸ்ரீமான்களான சி. பி. இராமசாமி ஐயரும், மகமது ஊஸ்மானும், ராமராய நிங்கரும், பாத்ரோவும், சிவஞானம் பிள்ளையும், ஆளொன்றுக்கு மாதம் 5500 ரூபாய் வீதம் சம்பளம் என்னும் பெயரால் கொள்ளையடிப்பதும், தனி வண்டியில் பிரயாணம் செய்வதுமாயிருக்கிறது. இதைப் பார்த்துப் பொறுக்காமல், ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்கார் நாக்கிலும், ஏ. ரெங்கசாமி ஐயங்கார் நாக்கிலும், சத்தியமூர்த்தி நாக்கிலும் ஊறின தண்ணீர் தானே நமது நாட்டில் சுயராஜ்யக்கட்சியாய்க் கிளம்பி, தேசத்தையும், சமூகத்தையும் பாழாக்கிக்கொண்டு வருகிறது. இந்த உத்தியோகங்கள் இந்திய மக்களுக்கு வீண் தெண்டத்துக்காகத்தானே, குலைக்கும் நாய்க்கு எலும்பு போடுவது போல், அரசாங்கத்தாரால் வீசி எறியப்பட்டிருக்கிறது. இந்த உத்தியோகங்களால், ஏழைகள் தலையில் கைவைத்து வரியை உயர்த்தி, வசூல் செய்து ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒரு சிலர் அநுபவிப்பதல்லாமல் வேறென்ன பிரயோஜனம்? இவ்வுத்தியோகங்களில்லாத காலத்தில் ராஜாங்கம் நடக்கவில்லையா? அந்த ராஜாங்கத்திற்கும், இந்த ராஜாங்கத்திற்கும் வித்தியாசம் தானென்ன? இந்த உத்தியோகங்கள் ஏற்பட்டதின் பலனாய், ஒரு வெள்ளைக்கார உத்தியோகமாவது, அதிகாரமாவது குறைந்ததா?

இந்த உத்தியோகத்தின் பலனாய் தேசத்தில் செல்வநிலை பெருகிற்றா? வரி குறைந்ததா? தீண்டாத மக்கள் தங்கள் தெய்வங்களைக் காணவாவது, தெருவில் நடக்கவாவது உரிமை பெற்றார்களா? கோடிக்கணக்காய் அந்நிய நாட்டாரால் வியாபாரத்தின் மூலமாய் சுரண்டப்படும் பணத்தில் முக்கால் துட்டாவது நமது நாட்டில் தங்க வழியேற்பட்டதா? கோடிக்கணக்கான மக்கள் மதுபானத்தினால் பாழாவதையாவது நிறுத்த முடிந்ததா? தேசத்துக்கு என்ன பலனைக்கொடுத்தது? சுயராஜ்யக்கக்ஷியாரென்போர், பாமர ஜனங்கள் இந்த இரகசியத்தை அறியாதபடி பத்திரிக்கைகளில் சதா காலமும் பொய்யும் புழுகும் எழுதியும், மனதறிந்த பொய்ப் பிரசாரங்கள் செய்தும், பொது ஜனங்களை ஏமாற்றி எல்லா உத்தியோகங்களையும் தாங்களே அடைய வேண்டுமென்னும் ஆசை பட்டுக்கொண்டும் கூடிக்கூடி எப்படி இந்த உத்தியோகத்தை அடைவது என்று சதியாலோசனை செய்து கொண்டும் இருக்கிறார்களேயல்லாமல், இவ்வித உத்தியோகங்கள் நமக்கு அவசியமா, அவசியமில்லையாவென்பதைப் பற்றி ஒரு நாளாவது பேசியதே கிடையாது.

### வேண்டாத சுயராஜ்யம்.

சுயராஜ்யக்கக்ஷியாரின் சுயராஜ்யம், தேசத்திற்கு உண்மையான சுயராஜ்யம் ஆகாது. இவ்வித சுயராஜ்யம் நமது நாட்டிற்கு வேண்டவே வேண்டாம். சுயராஜ்யக்கக்ஷியார் கேட்கிறபடி சர்க்காரால் கொடுக்கப்படும் சுயராஜ்யமென்னும் சீர்திருத்தம் மறுபடியும் வருமானால் படித்தவர்களுக்கும், உயர்ந்த ஜாதியாரென்று சொல்லுபவர்களுக்கும் ஆயிரக்கணக்கான சம்பளமும், உத்தியோகமும் கிடைக்கும். இதற்காக மறுபடியும் வரியை அதிகப்படுத்தவேண்டும். மக்களுக்குள் உயர்வு, தாழ்வு நிலைத்திருக்கும். குடியை ஒழித்தால் சர்க்கார் வரும்படி குறைவதன் மூலம் தங்களுடைய சம்பளம் குறைந்து போகுமானதால், குடியை நிறுத்த முடியாது. வியாபாரத்தின் மூலமாக அந்நிய நாட்டுக்குப் போகும் செல்வத்தை நிறுத்த இவர்கள் கையில் இட்டமொன்றுமில்லாததால் அதுவும் சாத்தியப்படாது. உத்தியோகத்தைக் குறைப்பதால், படித்தவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு மார்க்கமில்லாமற் போய்விடும். ஆகையால், அதையும் இவர்கள் செய்யமுடியாது.

### வேண்டிய சுயராஜ்யம்.

உண்மையான சுயராஜ்யமே நமக்கு வேண்டும். அது மகாத்மாவின் சுயராஜ்யமான கதர் உற்பத்தி செய்வதிலும், அதை உடுத்துவதிலும், தீண்டாமையை ஒழித்து மக்கள் சமமாய் வாழ்வதிலும், மதுபானம் ஒழிந்து மக்கள் ஒழுக்கமடைவதிலுமே தானிருக்கிறது. மகாத்மா சொல்லும் சுயராஜ்யமாகிய, கதர் உற்பத்திசெய்து உடுத்தினால், அந்நிய நாட்டுக்குப் போகும் 70 கோடி ரூபாயும், மில் யந்திரக்காரர் அநுபவிக்கும் 70 கோடி ரூபாயும், ஆக 140 கோடி ரூபாயில், குறைந்தது வருடம் 1-க்கு 100 கோடி ரூபாயாவது ஏழைகளுக்கு பங்கு வீதம் கிடைக்கும். மகாத்மா சொல்லும் தீண்டாமை என்னும் சுயராச்சியத்துக்குப் பாடுபட்டு வெற்றி பெற்றால், மிருகங்களுக்கும், புழுக்களுக்கும் கேவலமாயிருக்கும் தீண்டாதாரென்று சொல்லப்படும் 7 கோடி பேர்கள் மனிதர்களாவார்கள். இந்திய மனித சமூகத்துக்கு 7 கோடி மனிதர் லாபமாகும். பிராமணரல்லாதாருக்கிருக்கும் இழிவான, தாசிமக்கள், சூத்திரர் என்கிற பெயரும் நீங்கும். மகாத்மாவின் சுயராச்சியமாகிய மதுவிலக்குக்கு வேலை செய்து வெற்றிபெற்றால், தேசத்தில் மதுபானம் ஒழியும். ஏழைகள் சுகமாய் வாழ்வார்கள். வருடத்தில் 20 கோடி ரூபாய் ஏழைகளுடைய பணம் மதுபானவகையில் சர்க்காருக்குப் போய் உத்தியோகஸ்தர்கள் பங்கிட்டுக் கொள்வதை நிறுத்தும். ஆதலால் சுயராச்சியக் கட்சியின் சுயராச்சியம் வேண்டுமா? மகாத்மாவின் சுயராச்சியம் வேண்டுமா?

## தற்கால கல்வியிலுள்ள குறைகள்.

நமது நாட்டில் தற்காலம் கிடைக்கும் கல்வியைப்பற்றி மேனாட்டு முறைகளையும் மற்ற நாட்டிலுள்ள முறைகளையும் செவ்வனே அறிந்த பெரியோர்கள் பல குற்றங்களைக் காண்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை. அதைப்பற்றி இங்கு புதிதாக விவகரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனது பற்றி அவற்றை விடுத்து எனது அனுபவத்தில் காணப்படுகிற சில குறைகளை மாத்திரமே இங்கு விவகரிக்கிறேன். உதாரணமாக, ஒரு சாதாரணக்குடியில் பிறந்த ஒரு வேளாளப் பையன் தனது பிரைமரிப் படிப்பை முடித்து விட்டு ஒரு பட்டணத்திற்கு உயர்தரப் பாடசாலைக்கு மேற்படிப்பிற்கு அனுப்பப்படுவதாக வைத்துக்கொள்ளுவோம். இந்த ஹைஸ்கூலோ பலதரப்பட்ட ஜாதிப்பிள்ளைகள் கூடியிருக்கிற ஒரு இடமாகும். பட்டணமோ விவசாயத்திற்கு சிறிதும் சம்மந்தப்படாத இடமென்பதை மறுக்கமுடியாது. பள்ளிக்கூடத்தில் தொழில் படிப்பு வாசமே கிடையாது. சாத்தியமுமில்லை. ஏனெனில் நூற்றுக்கணக்கான தொழில்கள் தேசத்திலிருக்கிறது. ஆதலால் பல தொழிலைச் செய்யக்கூடிய பல ஜாதிப்பிள்ளைகள் வாசிக்கக்கூடிய ஒரு பொதுப் பள்ளிக்கூடத்தில் எல்லாருக்கும் தொழில் போதிக்கும்படியான வசதி ஏற்பட முடியாது. உதாரணமாக வண்ணான், நாவிதன், சக்கிலி, தச்சன், கொல்லன், தட்டான், வேளாளன், இவர்களும், தோல் பதனிட்டு ஜீவிக்கக் கூடிய மகம்மதியர் நூற்றுக்கு எழுபது வீதமும் ஒரு பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறதாக வைத்துக்கொள்ளுவோம். மகம்மதிய பிள்ளைகளுக்கு மட்டுமே தோல் பதனிடும் தொழிலைக்கற்றுக்கொடுக்க இந்தப்பள்ளிக்கூடத்தில் ஒரு நிபுணரை ஏற்படுத்துவதாகவும் வைத்துக்கொள்ளுவோம். பாக்கிப்பிள்ளைகளுக்கு என்ன செய்வது? ஒருவனுக்கோ சிலருக்கோ ஒரு நிபுணரை ஏற்படுத்துவது சாத்தியமில்லை. 600 பிள்ளைகளைக்கொண்ட ஒரு ஸ்கூலில் ஜாதிக்கு 30 பிள்ளைகள் வீதம் படிக்கிறதாக வைத்துக்கொண்டாலும், ஒவ்வொரு முப்பதுக்கும் ஒவ்வொரு தொழில் நிபுணரை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் சாத்தியமா? சாத்தியமென்று வைத்துக்கொண்டாலும் அதற்காக ஏற்படும் செலவைத்தாங்குவது முடியாத காரியமல்லவா? ஆதலால் ஒரு ஹைஸ்கூலில் அதிகத்தொகையுள்ள ஒரு தொழில் வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மட்டும் தொழில் நிபுணரைக்கொண்டு தொழில் கற்றுக்கொடுக்க ஒருவாறு சாத்தியப்படலாம். அதே பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுபான்மையோருக்கு தொழிற் கல்விக்கு மார்க்கமில்லை. இதனால் என்ன ஏற்படுமென்றால் எல்லா ஜாதிப்பிள்ளைகளுக்கும், அவரவர் தொழிலைக் கற்றுக்கொடுக்கவும் மார்க்கமில்லை. எல்லோரும் ஒரு தொழிலை கற்றுக்கொள்வதானாலும் பிரயோஜனமில்லை. அப்படியானால், தொழில் கல்வி புகட்டுவதை முடியாத காரியமென்று நான் கருதுவதாக கொள்ளக்கூடாது. நான் சொல்ல வந்ததெல்லாம் இப்போதுஸ்கூல்கள் உள்ள நிலைமையில் சுருக்கமான செலவில் பேருக்கு மட்டும் தொழில் கல்வியென்றில்லாமல், பிற்காலத்தில் மாணவர்களுக்கு பிரயோஜனப்படும்படியான ஒரு ஜீவனோபாயத்தைக் காட்டக்கூடிய ஒரு தொழில் கல்வியை புகட்ட முடியாதென்பதேயாகும். தொழில் பள்ளிக்கூடங்கள் தனியாக இருக்கிறது. அதில் சேர்ந்து தொழில் கற்றுக்கொள்ளலாமென்று சொல்லக்கூடும். அம்மாதிரி பள்ளிக்கூடங்கள் மிகவும் சொல்பம். தவிர, அவைகள் தொழிலிலேயே அதிக கவனத்தைச் செலுத்துவதால் அறிவை வளர்க்கும் படியான படிப்புக்கு அங்கு வசதி அதிகமாக இல்லை. தனிப்பட்ட அதாவது தொழிலுடன் சேராத அறிவு வளர்க்கும் படிப்பாவது, அறிவு வளர்க்கும் படிப்புடன் சேராத தொழில்படிப்பாவது பயன் தராது. ஆகவே சுருக்கமான செலவில் எல்லாத் தொழில்வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் பிரயோஜனம் தரக்கூடிய வகையில் படிப்புடன் கலந்த தொழில் படிப்பை எவ்விதம் அடைவது? அதற்குரிய மார்க்கங்கள் யாவை? என்பதை பற்றி சிறிது ஆராய்வோம்.

(தொடரும்)

எம். ஏ. ஆண்டமுத்து கவுண்டர்.

## திருப்பூர் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி தேர்தல்.

ஸ்ரீமான் கே. ஆர். ஈஸ்வர மூர்த்திக்கவுண்டருடைய தருமண்டிக்கட்டடத்தில் 7-11-25-ல் திருப்பூர் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீமான். கே. வி. வெங்கடாசலம் பிள்ளை தலைமையில் கூடி காங்கிரஸ தேர்தல் நடை பெற்றது. 1925-26 வருஷங்களுக்கு தலைவர் ஸ்ரீமான். கே வி. வெங்கிடாசலம் பிள்ளை காரியதரிசி ஸ்ரீமான் மா. வெ. கருப்பண்ண செட்டியார் பொக்கிஷதார், ஸ்ரீமான். கே. ஆர். ஈ.கம்பெனி க. பெருமாள் செட்டியார், நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்கள் ஸ்ரீமான்கள் பி. டி ஆஷர் ஷேட்., கே எஸ். ராமசாமிக்கவுண்டர், ஜே.எஸ் மகாதேவ ராவ், கே. வெங்கிட்டப்பகவுண்டர், கே. ஆர். ஈஸ்வர மூர்த்தி கவுண்டர், எஸ். வி. நஞ்சுண்டய்யர், என். ராமசாமி நாய்க்கர், சி எஸ் நாராயணசாமி அய்யர், அனுப்பபாளையம் பண்டிதர் சி. சொக்கநாத பிள்ளை, கலங்கல் ஜி. முத்தையநாயுடு, எஸ். ஏ. அப்துல்லா சாய்பு, பி. ஆர். துரைசாமி அய்யர், முதலியோர். ஜில்லா கமிட்டிக்கு ஸ்ரீமான். கே. வெங்கிட்டப்ப கவுண்டரும், தமிழ் மாகாண கமிட்டிக்கு ஸ்ரீமான். மா. வெ. கருப்பண்ண செட்டியாரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். காஞ்சிபுரம் மகாநாட்டுக்கு பிரதிநிதிகளாக ஸ்ரீமான்கள். ந. ராமசாமி நாய்க்கர், மா. வெ. கருப்பண்ண செட்டியார், கே. வெங்கிட்டப்ப கவுண்டர், கே வி. வெங்கிடாசலம் பிள்ளை, கே. ஆர். ஈஸ்வர மூர்த்தி கவுண்டர், எம். எஸ். சைதுபாஷாசாய்பு ஏ. முருகேசமுதலியார், பி. டி. ஆஷர் ஷேட், கே. எஸ். ராமசாமிக்கவுண்டர், டப்ளியூ பி. இக்நேஷியஸ். முதலியவர்களும் கான்பூர் காங்கிரசுக்கு, ஸ்ரீமான்கள். கே. எஸ். ராமசாமிக் கவுண்டர், பி. டி. ஆஷர் ஷேட், இக்நேஷியஸ், ந. ராமசாமி நாய்க்கர், கே பெருமாள் செட்டியார், எம் என் சிக்கண்ண செட்டியார், சி எஸ் நாராயணசாமி அய்யர் ஆகியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதற்குப் பின் அடியில் கண்ட தீர்மானம் சபையோர்களால் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

"பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் செய்த தீர்மானத்தைக் கண்டித்து காங்கிரசுக்காரர்கள் எப்போதும் கத்தரே கட்டவேண்டுமென்றும் காங்கிரஸ் நிதியை சுயராஜ்யக்கக்ஷியார் சட்ட சபை பிரசாரத்திற்குச் செலவு செய்யக்கூடாதென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது." இரவு 8 மணிக்கு வந்தனோபசாரத்துடன் மீட்டிங்கு இனிது முடிந்தது என காரியதரிசி அறிவிக்கிறார்.

## காஞ்சிபுரம் மகாநாட்டுக்குத் தீர்மானங்கள்.

1925-ஸு நவம்பர்-மீ 21, 22 தேதிகளில் காஞ்சிபுரம் மகாநாட்டில் இதனடியில்கண்ட இரண்டு தீர்மானங்கள் கொண்டு வருவதாக உபசரணை கமிட்டிக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

தீர்மானம் (1) பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியில் காங்கிரஸ்காரர்கள் ராஜீய விஷயங்களில் ஈடுபட்டிருக்கும் போது மட்டும் கதர் உடை தரித்தால் போதுமென்று செய்திருக்கும் தீர்மானமானது தேசத்தின் பொருளாதார உயிர் நிலையாகிய கத்தர்அபிவிருத்திக்குப் பெருத்த தடையாக இருக்கிறபடியால் கான்பூர் காங்கிரஸ் இத்தீர்மானத்தை மாற்றி காங்கிரசுக்காரர்கள் எப்போதும் கத்தரே கட்ட வேண்டுமென்று தீர்மானிக்கவேணுமாய் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

தீர்மானம்(2) "பாட்னா தீர்மானப்படி சுயராஜ்யக்கக்ஷியின் வசம் ஒப்படைப்பதாகவிருக்கும் காங்கிரசு நிதியானது தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு கதர்அபிவிருத்தி முதலிய வேலைகளுக்கென்று திரட்டப்பட்டிருப்பதால் காங்கிரசின் ஒரு சார்பினராகிய சுயராச்சியக்கக்ஷியாளர்கள் தங்களிஷ்டம்போல் சட்ட சபை முதலிய தேர்தல்களுக்கு உபயோகப்படுத்தவிடுவது தகாது என்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறபடியால், ஷை தீர்மானத்தை கான்பூர் காங்கிரஸ் மாற்றி ஷை நிதியை ஆதிக்கொள்கைக்கே உபயோகப்படுத்தவேணுமாயும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என திருப்பூர் ஸ்ரீமான். கே. வீ. வெங்கிடாசலம் பிள்ளை எழுதுகிறார்.

## அகில சாத்தாத ஸ்ரீவைஷ்ணவ 4-வது மகா நாடு.

கோயமுத்தூர் ஜில்லா திருப்பூரில் இம்மாதம் 27, 28-ந் தேதிகளில் நடைபெறவேண்டிய 4-வது மகா நாடு சில காரணங்களால் 1926-ம் வருடம் ஜனவரி-மீ 23, 24-ந் தேதிகளில் நடைபெறும் என காரியதரிசிகள் அறிவிக்கின்றனர்.

(5-வது பக்கம் தொடர்ச்சி.)

மேற் கூறப்பட்ட பாதைகளின் வழியாக ஜனங்களின் போக்கு வரவும் வியாபாரப் போக்கு வரவும் எவ்வித தடையுமின்றி நடைபெறுவதற்குறிய எல்லா வசதிகளையும் அரசாங்கத்தார் செய்திருந்தனர். தடை உண்டாக்கினவர் தகுந்த தண்டனைக் குட்படுத்தப்பட்டனர்.

இனி, அக்காலத்தில், போக்குவரவுக்கு என்னென்ன சாதனங்கள் உபயோகப் படுத்தப்பட்டனவென்பதைப் பற்றிக் கவனிப்போம். இரதங்கள் அப்பொழுது பெரும்பாலனவாக உபயோகப்பட்டனவென்று தெரிகிறது. பலவிதமான இரதங்கள் அவ்வப்பொழுது தயாரித்துக்கொடுப்பதற்கென்று 'ரதாத்யட்சன்' என்ற ஓர் உத்தியோகஸ்தன் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருந்தான். இரதங்களில் ஏழு வகைகள் இருந்தன வென்று சொல்லப்படுகிறது. இவை சராசரி பத்து அடி உயரமுள்ளனவையாய் இருந்தன. மற்றும் அந்தந்த உபயோகத்திற்குத் தகுந்த மாதிரி ஆறுவித இரதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. கோயில் விக்கிரகங்களை எடுத்துச் செல்வதற்கென்று (தேவரதம்) ஒரு வகை இரதம் இருந்தது. இங்ஙனமே கோயில் திருவிழாக் காலங்களுக்கென்றும், யுத்தத்திற்கென்றும், பிரயாணத்திற்கென்றும் பலவித இரதங்கள் இருந்தன.

சிறிய வாகனங்களில் பல வகைகள் இருந்தன. வைகுபானம் என்று சொல்லப்பட்ட சிறிய வண்டி; எருதுகளால் கட்டி இழுக்கப்பட்ட கோலிங்கம் என்ற வண்டி; சகடம் என்று அழைக்கப்பட்ட பெரிய வண்டி. இந்த வண்டிகளே பெரும்பாலும் உபயோகத்திலிருந்தன. இந்த வண்டிகள் மூலமாகவே வியாபாரத்தின் பெரும்பாகம் நடைபெற்றதாகத் தெரிகிறது. மேற்கூறப்பட்ட இரதங்கள், வண்டிகள் முதலியன ஒட்டகங்களாலும், எருதுகளாலும், குதிரைகளாலும் இழுத்துச் செல்லப்பட்டன. இவை தவிரச்சிவிகைகள் என்று அழைக்கப்பட்ட பல்லக்குகளும் அக்காலத்தில் உபயோகத்திலிருந்தன. பீடிகை என்ற ஒரு வகைப் பல்லக்கும் உபயோகப்பட்டு வந்ததாகத்தெரிகிறது.

மன்னன் செல்லும் பாதை அதிக ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவன் ஒரு குதிரை மீதேறிச் சென்றாலும் இரதத்திலோ அல்லது வேறெந்த வாகனத்திலோ ஏறிச்சென்றாலும் அவனுக்கு எவராலும் எவ்வித தீங்கும் நேரிடா வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்படிருந்தன. அரசனுடைய வாகனங்களைச் செலுத்துவதற்கென்று பரம்பரையான சாரதிகள் இருந்தனர். அரசனுடைய வாகனங்களுக்கோ, அவனால் செலுத்தப்படும் குதிரை முதலானவைகளுக்கோ எவரேனும் கேடு செய்தால் அவர் கடுமையான தண்டனைக் குட்படுத்தப்பட்டனர். பாதைகள் எல்லாம் அவ்வப் பொழுது செப்பனிடப்பட்டு வந்தன. இங்ஙனம் செப்பனிடும் வேலையில் முனைந்து நின்ற தொழிலாளர்கள் வரி செலுத்துவதினின்றும் விலக்கப்பட்டிருந்தார்கள். பாதைகளில் செல்லும் பாதசாரிகளுக்கும் மற்றப் பிரயாணிகளுக்கும் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. பாதைகளின் இரு மருங்கும் மரங்கள் வளர்க்கப்பட்டு வந்தன; இவைகளின் நிழலில் பிரயாணிகள் இளைப்பாறுவார்கள். தண்ணீர்ப் பந்தல்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தன. சாப்பாடு வசதிகளும் இரவில் தங்குவதற்கென்று சத்திரங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அசோகனுடைய பாதைச் சாஸனங்களும் இந்தச் சௌகரியங்களைப் பற்றிக் கூறுகின்றன.

இனி ஜலத்தின் வழியாக என்னென்ன போக்கு வரவு சாதனங்கள் இருந்தனவென்பதைக் கவனிப்போம். அக்காலத்தில் தரை மூலமாக எவ்வளவு அதிகமான வியாபாரப்போக்குவரவு நடை பெற்றதோ அவ்வளவு அதிகமானது நீரின் மூலமாகவும் நடை பெற்றதென்று சொல்லவேண்டும். கால்வாய்கள், நதிகள், சமுத்திரம் முதலியவைகளின் மூலமாக நடை பெற்ற கப்பல் போக்கு வரவுகளையெல்லாம் கவனிப்பதற்கென்று தனியான ஓர் இலாகா இருந்தது. இதில் பல உத்தியோகஸ்தர்கள் வேலைபார்த்து வந்தார்கள். வியாபாரச் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் கொண்டுபோவதற்குக் கால்வாய்கள் மிகுந்த சௌகரியமாயிருந்தன. இவைகளின் மூலமாகக்கொண்டு போவது குறைந்த செலவையுடையதாயிருந்தது. சமுத்திரக் கரையோரமாக ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு வியாபாரச் சரக்குகளைக்கொண்டு போவதும் அப்பொழுதைய வழக்கமாயிருந்தது. இது தவிர சமுத்திரத்தின் மூலமாக அந்நிய நாடுகளுக்கும் வியாபாரம் நடை பெற்று வந்தது. சமுத்திரத்தில் கப்பல்கள் சரியானபடி செல்வதற்காகக் குறித்த சில வழிகள் இருந்தன.

சமுத்திரத்தில் செல்வதற்கென்றும், நதிகளில் செல்வதற்கென்றும், கால்வாய்களில் செல்வதற்கென்றும், கப்பல்களோ, படகுகளோ, தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்தன. சமுத்திரத்தில் செல்லும் கப்பல்கள் க்ஷேத்ரம் என்று அழைக்கப்பட்ட துறைமுகத்தைச் சேர்ந்தவுடன் சுங்கம் செலுத்தவேண்டுமென்ற விதியிருந்தது. வியாபாரச்சரக்குகளை ஏற்றிக்கொண்டு செல்வதற்கென்று தனியான கப்பல்கள் இருந்தன. சமுத்திரத்தில் முத்துச் சலாபம் நடத்துவதற்கென்று, தனியான (சங்க முக்தா கிராஹிணஹ நாவாஹ) கப்பல்கள் இருந்தன. இந்தக்கப்பல்கள் அரசாங்கத்தாருக்கே சொந்தமாக இருந்தன. ஆனால் சில சமயங்களில் தனி வியாபாரிகளுக்கும் இவை வாடகைக்கு விடப்பட்டன. நதிகளில் சென்றகப்பல்கள் 'மஹாநாவாஹ' என்று அழைக்கப்பட்டன. அரசன் செல்வதற்கென்று தனியான கப்பல் இருந்தது. மிகவும் நம்பிக்கையான மாலுமிகள் இதனைச் செலுத்தினார்கள். இதனுடன் வேறொரு படகு இணைக்கப்பட்டிருந்தது. அரசன் நதியிலோ கால்வாயிலோ சென்றபோது இருகரைகளிலும் வீரர்கள் காவல் புரிந்து நின்றார்கள். மழைபெய்ததன் பயனாக ஏற்படும் வெள்ளப்பெருக்கில் செல்லச் சிறிய படகுகள் அரசாங்கத்தாருக்குச் சொந்தமானதாகவும், தனி மனிதர்களுக்குச் சொந்தமானதாகவும் இருந்தன. அக்காலத்திலும் கடற் கொள்ளைக்காரர்கள் இருந்தார்களென்று தெரிகிறது. இவர்களுக்குச் சொந்தமாகச் சில கப்பல்களும் இருந்தன. இவைகள் எந்த இடத்தில் அகப்பட்டாலும் அவைகளை உடனே அழித்துவிட வேண்டுமென்று கடற்படை இலாகாதார் உத்தரவு செய்திருந்தனர். கப்பல்களைச் செலுத்துவதன் பொருட்டுப் பலவித உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். இப்பொழுது 'காப்டன்' என்று அழைக்கப்படும் உத்தியோகஸ்தன் அப்பொழுது 'சாஸ்கன்' என்று அழைக்கப்பட்டான். இவன் தவிர நியாமகன் முதலிய பல உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள்.

கப்பல்கள், படகுகள் முதலியவை தவிர தண்ணீரைக் கடந்து செல்வதற்கென்று வேறு சில சாதனங்களும் இருந்தன. மரத்துண்டுகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய 'கஷ்ட சங்காதம்' என்ற சாதனமும் மூங்கில்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய 'வேணு சங்காதம்' என்ற சாதனமும் இருந்தன. இவை தவிர, தோலினால் மூடப்பட்ட கூடையும், தோல் பையும், காண்டா மிருகத் தோலினால் செய்யப்பட்ட மிதக்கும் கருவியும், தண்ணீரைக் கடந்து செல்லும் சாதனங்களாக உபயோகப்படுத்தப்பட்டன. ஜலத்தைக் கடப்பதற்குப் பாலங்களும் இருந்தன. படகுகளின் வரிசையும், யானைகளின் வரிசையும் பாலங்களாக உபயோகிக்கப்பட்டன.

கப்பல் கேழ்வை எங்ஙனம் வசூலிப்பதென்பதைப் பற்றியும், கப்பல், படகு முதலியவைகளைப் பழுது பார்ப்பதைப் பற்றியும், எந்தெந்த இடத்தில் எந்தெந்தக் காலத்தில் நதிகளைப் படகுகள் தாண்டலாமென்பதைப் பற்றியும், அந்நிய நாட்டு வியாபாரிகள் இராஜ்ய எல்லைக்குள் பிரவேசிப்பதைப் பற்றியும், சந்தேகிக்கப் பட்டவர்களைக் கைதி செய்வதைப் பற்றியும், கப்பல் கேழ்வை வசூலிப்பதில் சிலருக்குச் சலுகை காட்டவேண்டுமென்பதைப் பற்றியும் விதிகள் ஏற்பட்டிருந்தன. ஸ்வர்ண பூமி (பர்மா)யிலிருந்து ஒருவித சந்தனமும், சிங்களத்திலிருந்து இரத்தினம், அகில் முதலிய விலையுயர்ந்த சாமான்களும், சீன தேசத்திலிருந்து சிலவகை ஆடைகளும் மகத நாட்டிற்கு வந்துகொண்டிருந்ததாக அர்த்த சாஸ்திரத்திலிருந்து தெரிகிறது.

இது காறும் கூறியவற்றால், சந்திரகுப்தனுடைய ஆட்சிக்காலத்தில், போக்குவரவு சாதனங்களின் மூலமாக ஜனங்களுக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட முடியுமோ அவ்வளவும் ஏற்பட்டிருந்தனவென்பதும், உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் எவ்வளவு தீவிரமாக நடைபெற்று வந்தனவென்பதும், தற்போதைய பொது ஜன அபிப்பிராயத்தின்படி, ஒரு நாகரிக அரசாங்கத்தில் குடிகளுக்கு என்னென்ன சௌகரியங்களை நாம் எதிர் பார்க்கலாமோ அவ்வளவு சௌரியங்களும் ஏறக்குறைய மௌரிய வம்சத்தாருடைய ஆட்சியில் இருந்தனவென்பதும் நன்கு புலனாகும்.

(லக்ஷ்மி)

## தீண்டாமை.

### பிறவியினுல் உயர்வு, தாழ்வு இல்லே.

மகாத்மா காந்தி தமது "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதி யிருப்பதின் சாராம்சமாவது:—

நான், மைமன் சிங்குக்குச் சென்றிருக்கும்போது அங்குள்ள "ஜில்லா வைசிய சபா" சங்கத்தார் ஓர் யாதாஸ்தை எனக்குக் கொடுத்தனர். அது பொது ஜனங்களின் கவனத்தைப் பெறவேண்டிக் கீழே குறிப்பிடுகிறேன். அந்த யாதாஸ்தில் காணப்படுவன வருமாறு:—

1. எங்கள் சங்கம் எங்களுடைய குல முன்னேற்றத்தைக் கருதி உழைக்கின்றது.

2. தாங்கள் சர்க்காவிற்கும், கதருக்கென்றும் உழைப்பதுடன், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகவும், தீண்டாமையொழிக்கவென்றும் உழைத்து வருகின்றீர்கள். இந்த விஷயங்கள் யாவருக்கும் பொதுவானதேயாகும்.

3. வங்காளத்தில் இந்து மகா சபையொன்று இருக்கிறது. அதில் இரண்டு பிரிவுகளிருக்கின்றன. ஒன்றுக்கு ஜால் ஆச்சார்னியா என்று பெயர். இதில் பிராமணர்கள், பைத்துவர், காயஸ்தர், நவசகர் என்னும் பெயருடைய ஒன்பது, பத்து வகுப்பினர்கள் அடங்கி யிருக்கின்றனர். மற்றொன்றுக்கு அஞுச்சார்னியா என்று பெயர். இதில் பைஷியாகர், சுப்பர்னபனிகர், சூத்ரதாரர், ஜோகிகள், சுண்டிகள், செம்படவர், வண்ணுர், நாமசூத்திரர் என்னும் பெயருடைய பல வகுப்பினர் அடங்கியிருக்கின்றுர்கள். பின்னர் கூறப்பட்ட வகுப்பினர் யாவரும் தாழ்த்தப்பட்ட ஜாதியினர் எனக் கருதப்பட்டு அங்ஙனமே நடத்தப்படுகின்றனர்.

இவ்விரு வகுப்பினரும், இந்து மகாசபையின் உறுப்பினராயிருந்த போதிலும், மேன்குலத்தவரெனச் சொல்லிக்கொள்ளுபவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை வெகு அநியாயமாகவே நடத்துகின்றுர்கள். தாழ்த்தப்பட்டவர்களே, மேன்குலத்தார், கடவுள் சேவைக்கென்று ஆலயத்துக்குள் விடுவதில்லே. மாணவர் சாப்பாட்டு விடுதிகளில் ஒன்றுய் உட்கார்ந்து சாப்பிடுவதில்லே. சாப்பாட்டுக்கடைகளுக்கும், மற்றும் பல காரக்கடைகளுக்கும் செல்ல அனுமதி கொடுப்பதில்லே. இவ்வித கஷ்டங்களேயெல்லாம் நிவர்த்தித்துத் தீண்டாமையை ஒழிக்கவே உழைக்கின்றேமெனக் கூறி வேலே செய்யும் சிலரும் சரியானபடி-சரியான முறைகொண்டு பிரசாரம் செய்வதாகவும்கூற முடியாது.

1921-ம் வருட ஜனத்தொகைக்கணக்கின்படி வங்காளத்தில் இந்துக்களின் மொத்த ஜனத்தொகை 2,09,40,000 சொச்சம். இதில் பிராமணர்கள், 13,09,000, காயஸ்தர் 12,97,000, பைத்துவர் 1,03,000, ஆக 28,09,000 சொச்சமாகும். அல்லாமலும் பைஷியாகர் எனக்கூறப்படும் ஜாதியினர் கிழக்கு வங்காளத்தில் வியாபார துறையில் மிகுந்த செல்வாக்குடையவர்கள், இவர்கள், மைமன்சிங், பாப்னு, போக்ரா, ராஜ்ஹாய், பரித்பூர், டாக்கா, நோகாகாலி, சிட்டகாங், டிபேரா, சியல்ஹெட் முதலிய ஜில்லாக்களில், பரவி இருக்கின்றனர். இவர்களின் ஜனத்தொகை 3,60,000.

இவ்விருபிரிவினரும் பொதுவாகக் கல்வித்துறையில் அதிக முன்னேற்றம் அடைந்தவர்களல்லவென்று கூறலாமெனினும் முதலாவதாகக் கூறப்பட்ட வகுப்பினர் இவ் விஷயத்தில் அதிக தேர்ச்சியடைந்தவர்களென்றே சொல்லலாம். தாழ்த்தப்பட்டவர்களெனக்கருதபபடும் எங்கள் வகுப்பினரும், கல்வி விஷயமாக மிகுந்த சிரத்தை எடுத்திருக்கின்றனர்-இன்னும் எடுத்துக் கொண்டும் வருகின்றனரென்பதை இந்த யாதாஸ்த்தில் குறிப்பிட வேண்டியது எங்கள் கடமையாயிருக்கின்றது. எங்களுக்கென்று, அநேக கலாசாலேகள், உயர்தரப் பாடசாலேகள், ஆரம்பபாடசாலேகள், தர்ம சத்திரங்கள், இலவசவைத்தியசாலேகள், மதசம்மந்தப்பட்ட தர்மஸ்தாபனங்கள் முதலிய பல இருக்கின்றன. பெண்கல்வி விஷயத்திலும் நாங்கள் ஏனேய வகுப்பாரைப்போலவே முன்னேற்றமடைந்துள்ளோம்.

இவ்வளவிருந்தும் நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என இந்து மகா சபையாராலேயே கருதப்படுகிறேம். நாங்கள் இந்துமதத்தைச் சேர்ந்திருந்தும், தேசிய விஷயத்திலோ, மற்றும் பொதுக் காரியங்களிலோ மற்றவர்களுடன் ஒன்றித்து உழைத்தும் எங்கள் நிலேமையானது இவ்விதம் எண்ணப்படுவதைத் தாங்கள் கவனிக்கக் கோருகிறேம் ஆனல் இன்னுமொரு விஷயம் இங்கு குறிப்பிடுவது அவசியமாயிருக்கின்றது. இரண்டாவதாக குறிக்கப்பட்ட வகுப்பினருக்குள் சுண்டிகளென்னும் ஜாதியார் முற்றிலும் வேருனவர்கள். இவர்கள் மற்ற வகுப்பினர்களுடன் சேர்ந்துகொள்ள வேண்டுமென்னும் ஒரே கருத்தைக் கொண்டு தங்களுக்குப் புதிதாக ஷகாயர் என்னும் பெயரை வைத்துக்கொண்டு வருகின்றனர் இதைக்கண்டு வங்காள இந்து மகா சபையிலுள்ள மேன் குலத்தவர் சிலர் பொருமைப்படுகின்றனர். சுண்டிகளென்பதை மாற்றி ஷகாயர் என்று பெயர் வைக்கலாமாவென ஆத்திரப்படுகின்றுர்கள். இவர்களுடைய ஆத்திரத்தையும், அக்கிரமத்தையும் நாங்கள் பொருட்படுத்தாது, அப்பெயர் வைக்கப்பட வேண்டிய காரணத்தைக் குறிப்பிட்டு புஸ்தகங்கள் வெளியிட்டிருக்கிறேம் எங்கள் வகுப்பு முன்னேற்றத்தைக் கருதி, எங்களுக்குள்ளாகவே பல சங்கங்களேயும் ஸ்தாபித்திருக்கிறேம். அவைகளும் நல்ல வேலே செய்து வருகின்றன.

தீண்டாமை என்பது ஓர் அவமானமான காரியமாயிருப்பதால் அதை முற்றிலும் தொலேத்துவிடக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறேம். இதற்கு தங்கள் ஆலோசனேயும், உதவியும் தேவையாயிருக்கிறது. வங்காள இந்துமகா சபையானது செய்யும் முறையற்ற காரியங்களேத் தாங்கள் கவனிப்பீர்களென்று நம்பிக்கையுடனிருக்கிறேம். தீண்டாமையை ஒழித்து, தாழ்த்தப்பட்டவர்களே முன்னுக்குக் கொண்டு வருவதே தங்கள் லக்ஷியமாயிருப்பதால் எங்கள்விஷயத்திலும் பரிவு கொள்ள மீண்டும் தங்களேக் கேட்டுக் கொள்ளுகிறேம்.

"மேலே குறிப்பிட்டுள்ள யாதாஸ்தில் குறிப்பிட்டுள்ள விஷயங்களில் சில மிகை படுத்திக் கூறப்பட்டிருக்கின்றதென்பது உண்மையே. என்றுலும், பொது ஜனங்களின் கவனத்தை இது பெறவேண்டுமென்பதைக்கருதியே அதை வெளியிட்டுள்ளேன். இந்து மதத்தின் பலத்தை, தீண்டாமையானது நாளுக்கு நாள் உறிஞ்சிக்கொண்டே வருகின்றது. தீண்டாமையால் ஏற்பட்டுள்ள கெடுதிகள் யாவையும் இப்போது நான் இங்கே கூறவரவில்லே. ஆனல், தீண்டாதார் என ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பவர்க்குள்ளும் தீண்டாமை என்றும் அநியாயமிருப்பதை யாவரும் ஒத்துக் கொள்ளுவார்களென நம்புகிறேன். இவர்களுக்குள்ளாகவே, நான் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன், நான் மேல் ஜாதி, அவன் கீழ் ஜாதி, என தகராறு செய்து கொள்வது பெருத்த மோசமாகும். தீண்டாதார்க்குள்ளேயே உயர்வு, தாழ்வு, மேல் குலம், கீழ்குலம் என்று இருப்பதை என்னுடைய சுற்றுப்பிரயாணங்களில், ஆங்காங்கு பார்த்திருக்கிறேன். உதாரணமாக, அன்றியாஜி என்னும் வகுப்பினர் தீண்டாதாரென்று கருதப்படுபவர்களேயாகும். இவர்கள், தீண்டாதாருக்குள்ளேயே அடுத்த வகுப்பினரைத் தொடவுமாட்டார்கள், அவர்கள் குழந்தைகள் வாசிக்கும் பாடசாலேக்கு தங்கள் பிள்ளேகளே அநுப்பவுமாட்டார்கள். தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதில் எனக்கு மிகவும் அநுதாபம் உண்டென்பது வாசகர்கள் அறிந்ததே. ஆனல் இவர்களுக்குள்ளாகவே, உயர்வு, தாழ்வு, என்று கற்பனே செய்து கொண்டிருப்பதை முதலில் ஒழித்துவிடவேண்டும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தீண்டாமையென்பது, இந்துமதத்திற்கும் இந்து சமூகத்திற்கும் இழிவை உண்டாக்கக் கூடியதேயாகும். மனிதனுடைய பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லே என்பதே என்னுடைய அபிப்ராயம். உயர்ந்தவனெனப் பெருமை பாராட்டிக் கொள்ளும் மனிதனுடைய ஆத்துமாவிற்கும், தாழ்ந்தவனெனக் கருதப்படும் மனிதனுடைய ஆத்மாவிற்கும் பிறப்பினுல்,எவ்வித வேற்றுமையும் இருக்கின்றதா வென்பதை யாவரும் கவனிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். உண்மையான உயர்வு பிறவியினுல் ஏற்படவே மாட்டாது. வருணுச்சிரமம் என்பதற்கு உயர்வு, தாழ்வு என்று அர்த்த மில்லேயென்பதே என் அபிப்பிராயம். யாரார் என்னென்ன தொழிலேச் செய்கின்றுர்களோ அதைக் கொண்டு உயர்வு, தாழ்வு எனப்பிரித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு வகுப்பினரும் தம் தம் உழைப்பினுல் உயர்வைச் சம்பாதித்துக்கொள்ளலாம். மற்றப்படி, பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று சொல்லிவிட்டதால் அவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர் என எப்படிக் கூறமுடியும்? இந்து மதத்தில் இவையெல்லாம் தவிர்த்து, தீண்டாதார் என ஐந்தாவது ஜாதி ஒன்றை வைத்துக்கொண்டிருப்பது முறையற்ற கொள்கையேயாகும். ஆகையால் உண்மையான வருணுசிரமம் பிறப்பினுல் அல்ல: அவரவர் தொழிலினுலேயே ஏற்படுகிறதாகையால், யாவரும் ஒருமனப்பட்டு தீண்டாமையை ஒழிக்க முன் வருவார்களாக."

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்டு.

இலங்கை நாட்டிற்கு நமது "குடி அரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலயம், ஸ்ரீமான். பே. பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் மேல் அவரும் சம்மதித்ததால், அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் ஷெட்டியாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

## சிதம்பரம் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி தேர்தல்.

2-11-25 ல் மாலை 5 மணிக்கு தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் கூடிய கூட்டத்தில் கீழே கண்டவர்கள் தேர்ந்து எடுக்கப் பட்டனர்.

(1) அக்ராசனர்:— விளாகம் மிராஸ்தார் ஸ்ரீமான் இராஜகோபால் பிள்ளை,
காரியதரிசி:— ஸ்ரீமான் நயினியப்பன், சிதம்பரம்.
உபகாரியதரிசி:— ஸ்ரீமான் R. ராமலிங்கம் பிள்ளை; ஒரத்தூர்
பொக்கிஷதார்:— ஸ்ரீமான் தி. வ. தி. குஞ்சிதபாத முதலியார், ஜவுளிவியாபாரம், சிதம்பரம்.
நிர்வாகிகள்:— ஸ்ரீமான்கள் M. S. இராஜகோபால் பிள்ளை (1), G. கோபால்சாமி முதலியார் (நடராஜா கதர்ஸ்டோர்) (2), N. கிருஷ்ணசாமி இராஜாளி குமாரன். (3), அப்துல்லாசாஹிப் பரங்கிப்பேட்டை (4), மாணிக்கம் செட்டியார் புவனகிரி. (5), முத்துக்குமாரபிள்ளை நெய் வாசல் (6), பக்கிரியாபிள்ளை பஞ்சாயத்து மெம்பர் மன்னார்குடி. (7), வக்கீல் சடகோபாச்சாரியார் சிதம்பரம்

(2) ஜில்லா சபை பிரதிநிதி:— ஸ்ரீமான் நயினியப்பன் சிதம்பரம்.

(3) மாகாணசபை பிரதிநிதி:— ஸ்ரீமான் பார்த்தசாரதி சிதம்பரம்.

இக்கமிட்டியானது காங்கிரஸ் காரியாலயத்தில் நிறுவியுள்ள ஸ்ரீவரதராஜுலு இலவச வாசகசாலைக்கு "நவசக்தி", "பால இந்தியா" "தமிழ்நாடு" தெய்வபக்தன்,, "குடி அரசு,, "பால இந்தியா,, பத்திரிகைகளை அவற்றின் அதிபர்கள் இனாமாக அனுப்பி வருவதற்கு மனமுவந்த வந்தனம் அளிக்கின்றது என்று சிதம்பரம் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி எழுதுகிறார்.

## கோயமுத்தூர் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி தேர்தல்

நாளது 1925ம் வருஷம் நவம்பர்மாதம் 15ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு கோயமுத்தூர் தாலுக்கா, ஜில்லா காங்கிரஸ் ஆபீசில், கோயமுத்தூர் தாலுக்கா, ஜில்லா மாகாண நிர்வாக அங்கத்தினர் தேர்தல் நடைபெற வேண்டியிருப்பதால் கோயமுத்தூர் தாலுக்கா காங்கிரஸ் அங்கத்தினர்களெல்லோரையும் விஜயம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன், எனக் காரியதரிசி எழுதுகின்றார்


### கலியுகத்தில் "ஓர் மகானின் மகிமை"

மகத்துவமுள்ள மகானால் கலியுக கற்பகமாக விளங்கும்.

"அருமையான மூலிகையும்"

"தாயத் என்னும் ரட்சையும்"

(எந்த மதஸ்தர்களும் உபயோகிக்கத் தக்கவை.)

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் உண்டாகும் பலவித நோய்களும், பார்வை, தோஷங்களும், பலவித குஷ்டம், க்ஷயம், வலிப்பு, இளைப்பு, பிரமை, பைத்தியம், வாத நோய்கள், மேகசம்மந்த வியாதிகள், விஷத்தாலேற்படும் பலவிதவியாதிகள் முதல் தீராதென்றெண்ணி சகலவிதமான வியாதிகளும், செய்வினைகளும் கவலைகளும் ஆச்சரியமாகும்படி பூரணகுணமாகியிருப்பதையும்,

நீண்டநாளாக புத்திரபாக்கியமில்லாதிருந்த அனேகருக்கு புத்திரபாக்கியம் உண்டாயிருப்பதையும்,

அபாரமான காரியங்களெல்லாம் வெற்றியடைந்திருப்பதையும் ஸ்பெஷல் தாயத் என்னும் (ரட்சைகளால்) கவலைகள் நீங்கி, ஒவ்வொருக்கும் கோரிய காரியங்கள் நிறைவேறியிருப்பதையும், இந்த நிமிஷமே பார்க்கலாம்.

ஏராளமான சகலதேசத்தார்களின் நற்சாட்சிகளாலும் காணலாம். தமிழ்வைத்திய சங்கத்தில் தகங்மெடலும், நற்சாக்ஷியும் பெற்றவை.

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

கவனியுங்கள்!!

இந்த சமயத்தை கைவிடாதீர்கள். இதுவே நல்ல காலமாகும். வேண்டியவர்கள் உங்கள் முழு விலாசத்தோடு எதற்காக தேவையிருந்தபோதிலும் ஆரம்ப முதல் சரிவர விபரமெழுதி, பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து கோயமுத்தூர் ஜில்லா, மேட்டுப்பாளையம் "பாலசந்திரன் ஆபீஸ்" தலைவர் ஸ்ரீமான் எஸ். எ. கே. பிள்ளை அவர்களுக்கு எழுதிக்கொள்வீர்களானால் விபரமான பதிலும், சகல விபரமும் அனுபந்தங்களும் கிடைக்கும்

எவ்வித வியாதிகளுக்கும் பத்தியமில்லை.

☞ எந்த தேசத்திய ஸ்டாம்புகளும் அனுப்பலாம்

இனாம்! இனாம்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O.) சென்னை.

### "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி, ரங்கூன்.

### "தேசபக்தன்"

ஓர் தேசியத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.

வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.

வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.

கைமேல் பலன் கிடைக்கும்

இது ஹம்பக்கில்லை.

பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது

ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

### ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை நாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

### பெயர் பெற்ற ஊத்துக்குளி சுத்தக் கத்தர்.

50x16 குஞ்சம் அச்சில் நெசவு அழுத்தமும் நயமுள்ளதாயும் கதர்போர்டின் விலைக்கு விற்கப்படும். வேஷ்டி, துண்டு, காங்கிரெஸ் கலர் வெள்ளைக் கோட்டிங் மற்ற எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலைவிபரங்களுக்கு எழுதவும்.

அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

K. V. குப்புசாமி அய்யர்,
கதர் வியாபாரம், ஊத்துக்குளி.

S. I. R.

## உண்மையான கதர். கெட்டியானகதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள், காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி,

மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம், திருப்பூர்



வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ் கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள். ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,

ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம் (தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி)

ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கை நூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,

காரியதரிசி கத்தர், இலாகா.



**28** வருடங்களாய் உலகப்பிரசித்திபெற்ற

வைத்யரத்ன பண்டிட்

## D. கோபாலாசார்லு அவர்களின்

### திவ்ய அவுஷதங்கள்.

காலரு அவுஷதங்கள், ப்ளேக் அவுஷதங்கள்

ஒருமுறை உபயோகித்தால் விஷபேதியும், ப்ளேக்கும் பறந்தோடும்.

**ஜீவாம்ருதம்.**

தேகபலம், மனோசக்தி, இந்திரிய புஷ்டியைக் கொடுத்து தேகவளிவை யளிக்கும் விலை ரூ. 3—4—0

**ப்ருகுவடி.**

எக்காரணத்திலுண்டான தாது நஷ்டத்தையும், மேக வெட்டை முதலிய கொரோ வியாதிகளை அற வேயொழிக்கும். புட்டி 1க்கு ரூபாய் 2—0—0

**ஸித்தமகரத்வஜ.**

நபும்சகத்தை வேருடன் துலைத்து இந்திரிய புஷ்டி கொடுத்துவஜ்ரதேகிகளாகச் செய்யும்.

## ஆயுர்வேதாஸ்ரமம்.

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு.

காந்திநகர், மதராஸ்



# இம்ப்ருவ்ட் லீவர்

## பாக்கெட் கெடியாரங்கள்.

ஓவர்லண்ட் பாக்கெட் கெடியாரம் நிக்கில் கூடு, தூம்பு தூசி நுழையக் கூடாத மூடியுள்ளது. பிரத்யேகமாய்தருவித்த உயர்ந்த திக்கு கண்ணாடி யுள்ளது 6 லீவர்களுள்ளது. அழகான பெட்டியுடன் ஒரு சங்கிலியும் விலை ரூ. 8—12—0.

பெஸ்ட் பேடண்டு லீவர் வாட்ச விலை ரூ. 4—12—0

(Fido) பிடோ லீவர் கெடிகாரம் சிறிய ரூபம், மிக்க உறுதியானது, அழகுள்ள நிக்கல் கேஸில் அமைந்தது. நேர்த்தியான உறுதியுள்ள அமைப்புள்ளது. உத்திரவாதமுள்ள, டென்ட்டு செய்த எங்கள் சாமான்களை வாங்குங்கள். எங்கள் நாணயமும் நம்பிக்கையுள்ளதுமான வர்த்தகஸ்தலத்தின் கியாதி ஒரு முறை பரீட்சித்தால் விளங்கும் தயவுசெய்து ஒரு முறை பரீட்சியுங்கள்.

### ஜலால் அண்டு சன்ஸ்,

வெஸ்டு அண்டு கெடியாரம் வியாபாரிகள்,

61, ராட்டன் பஜார், சென்னை.



# குடி நூல்.

இது தமிழ்நாடு கதர் போர்டு காரியாலயத்திலிருந்து வெளியாகும் மாதமிருமுறைப் பத்திரிகை.

ஆசிரியர். ஸ்ரீமான். எஸ். இராமநாதன்.

வருட சந்தா **1—0—0**. அல்லது

**8000**. கெஜம் கைஇராட்டையில் நூற்கப்பட்ட நூல்.

விலாசம்:— காரியதரிசி.

**தமிழ்நாடு கதர் போர்டு காரியாலயம்.**

ஈரோடு.



## "தெய்வீகன்."

தேச முன்னேற்றத்தையும், பார்க்கவ குலநலத்தையும், பாஷாபிவிருத்தியையும் நாடி பல பண்டிதர்களால் எழுதித்தரப்பெறும் அரிய கட்டுரைகள் மாதாந்தரத்தில் பொலிந்து கிடக்கும்.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2—0—0**

ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1—8—0**

மாதிரிப் பிரதி விலை அணா இரண்டு.

காரியஸ்தர். "தெய்வீகன்"

பொன்மலை, திருச்சி.



## நவ இந்தியா.

திருவாரூரினின்றும் வாரந்தோறும் பிரசுரமாகும், ஓர் சிறந்த தேசீய வாரப் பத்திரிகை. இந்திய முன்னேற்றம், இந்தியாவின் விடுதலை, முதலிய துறைகளில் முன்னின்றுழைப்பது. பல வருடங்களாய் தேசீய விடுதலைக்குப் பாடுபட்டுழைப்பவரும், "தஞ்சை ஜன நேசன்" "கமலாஸனி" இவ்விரு பத்திரிகைகளின் ஆசிரியராயிருந்து அனுபவம் பெற்றவருமான ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியாரை ஆசிரியராகக் கொண்டது. விளம்பரம் செய்வதற்கேற்றது. சார்ஜ் மிகவும் குறைவு. வருட சந்தா ரூ. **5—0—0** தான். மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

நவ இந்தியா,

திருவாரூர், S. I Ry.


ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வே. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.